வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 16.07.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 225 | பக்கங்கள் : 16

# தீர்வு குறித்த வாக்குறுதியை நிறைவேற்ற இலங்கையிடம் வலியுறுத்தும் அமெரிக்கா



### கூட்டமைப்பிடம் தூதுவர் வாக்குறுதி

கொழும்பு, ஜூலை 16

"தமிழ்த் தேசியப் பிரச்னைக்கான தீர்வு சம்பந்தமாக இலங்கை வழங்கியிருக்கும் வாக்குறுதிகளின் அடிப்படையில் செயலாற்ற வேண்டும் என்பதை அமெரிக்கா தொடர்ந்தும் வலியுறுத்தும்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் நேரில் உறுதியளித்தார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா 15

# பருத்தித்துறை நகரம் நேற்றுடன் முடக்கம்!

## வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியும் முடங்கியது

- தொற்றாளர்கள் தொடர்ச்சியாக அதிகரிப்பு
- டிப்போவிலிருந்து பஸ் சேவை நடைபெறும்

வடமராட்சி, ஜூலை 16

பருத்தித்துறை நகரத்தின் இதய பகுதி என்று அழைக்கப்படும் - ஜே/401 கிராமசேவகர் பகுதி நேற்று மாலை முதல் முடக்கப்பட்டது. 15

## கொரோனா தொற்றால் மேலும் 50 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 16

நாட்டில் மேலும் 50 பேர் கொரோனாத் தொற்றால் மரணித்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 661 ஆக 15

## நேற்று 1,447 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஜூலை 16

இலங்கையில் நேற்றும் 1,447 புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 80 ஆயிரத்து 506 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நேற்று 939 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்து சிகிச்சை நிலையங்களிலிருந்து வெளியேறியுள்ளனர்.

அதற்கமைய, இதுவரை நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 53 ஆயிரத்து 953 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## பருத்தித்துறையில் 48 பேர் உட்பட வடக்கில் நேற்று 69 தொற்றாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 16

பருத்தித்துறை மருத்துவ அதிகாரி பிரிவில் 48 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 69 தொற்றாளர்கள் புதிதாக நேற்று அடையாளம் காணப்பட்டனர். 15

## யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் டெல்டா திரிபு தொற்றாளர்கள்!

யாழ்ப்பாணம், ஜூலை 16

ஆபத்தான - அதிவேகமாக பரவும் டெல்டா திரிபு யாழ்ப்பாணம், கிளிநொச்சி பகுதிகளை சேர்ந்தவர்களுக்கும் பரவியுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் நேற்று வெளியிட்டார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கொழும்பு, பிலியந்தலை பகுதிகளை சேர்ந்த 19 பேர் கொரோனா வைரஸின் டெல்டா திரிபு தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## பிரிட்டன் மீதான மனித உரிமை அறிக்கையை இலங்கை ஆதரித்தமை கண்டனத்துக்குரியது

### ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 16

மனித உரிமைகள் தொடர்பில் பிரிட்டனுக்கு எதிரான தீர்மானத்தில் இலங்கை அரசு கையெழுத்திட்டுள்ளமை கண்டிக்கத்தக்க விடயமாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

பிரிட்டனின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் விசனத்தை வெளிப்படுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் சீனாவால் முன்வைக் 15

## 'டெல்டா' அபாய வலயமாக கொழும்பு நகரம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 16

கொரோனா வைரஸ் தொற்றின் புதிய 'டெல்டா' வைரஸ் பரவல் அபாய வலயமாக கொழும்பு நகரம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகரை அண்மித்த பகுதிகளில் 'டெல்டா' வைரஸ் தொற்றுடன் மேலும் 14 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கொழும்பு மாநகர சபையின் தலைமை 15

## முழு அரசுக்கும் எதிராகவே பிரேரணை வர வேண்டும்

### சஜித் அணியிடம் ரணில் வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 16

"ஐக்கிய மக்கள் சக்தியால் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை முழு அரசுக்கும் எதிரான பிரேரணையாக மாற்றப்பட வேண்டும்."

- இவ்வாறு வலியுறுத்தி 15

## சர்வதேச நாணய நிதியத்தை நாடவேண்டிய தேவையில்லை

### ரணிலுக்கு கப்ரால் பதிலடி



கொழும்பு, ஜூலை 16

நாட்டின் தேசிய பொருளாதார நிலைமைகள் மற்றும் அந்நிய செலாவணி துறை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்ரமசிங்க குறிப்பிடும் கருத்துக்கள் அடிப்படையற்றவை.

பொருளாதார நிலைமையை சீர்செய்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடவேண்டிய தேவை கிடையாது என நிதி மூலதனச்சந்தை இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார். 15

## இப்படியும் நடக்கிறது...!

கடற்கரை ஓரம் இருந்த ஊரில் ஒரு கலங்கரை விளக்கு இருந்தது. பாறைகள் நிறைந்த கடல் பகுதியானதால் கப்பல்கள் பாறைப் பகுதியைத் தவிர்த்து பத்திரமாகச் செல்ல வகை செய்யும் வண்ணம் அந்தக் கலங்கரை விளக்கை அமைத்திருந் தார்கள். எண்ணையால் எரியும் விளக்கு அது.

கலங்கரை விளக்கை செயல்படுத்த ஒரு காப்பாளன் புதிதாக வேலைக்குச் சேர்ந்திருந்தான்.

வாராவாரம் கலங்கரை விளக்கிற்குத் தேவையான எண் ணெயை கப்பல் நிறுவனங்கள் அவனுக்குத் தப்பாமல் அனுப்பிக் கொண்டிருந்தன. காப்பாளனின் முக்கியமான வேலை கலங்கரை விளக்கைக் காப்பது மற்றும் விளக்கு அணையாமல் அதை பார்த்துக்கொள்வது மட்டுமே.

ஒரு கடுங் குளிர்கால இரவில் கலங்கரை விளக்கின் அலுவல கக் கதவை யாரோ தட்டினார்கள். காப்பாளன் கதவைத் திறந்து பார்த்தான். பக்கத்து ஊரைச் சேர்ந்த முதியவர் ஒருவர் குளிரில் நடுங்கிக் கொண்டே நின்று கொண்டிருந்தார்.

“தம்பி! என் வீட்டில் விளக்கெரிக்கக்கூட எண்ணை இல்லை. குளிர் நடுங்குகிறது. நீ மிகவும் நல்லவனாகத் தெரிகிறாய். கொஞ்சம் எண்ணை கொடுத்தால் பிழைத்துக் கொள்வேன். சீக்கிரம் திருப்பிக் கொடுத்து விடுவேன்”, என்று கெஞ்சினார்.

மனமிரங்கிய காப்பாளன் அவருக்குக் கொஞ்சம் எண்ணெய் கொடுத்தனுப்பினான்.

அடுத்த நாள் இரவு, ஒரு வழிப்போக்கன். “அண்ணே! என் கை விளக்கில் எண்ணை தீர்ந்து விட்டது. பயணத்திற்கு எண்ணை கொடுத்து உதவினால் மிகவும் நன்றி உள்ளவனாக இருப்பேன்”, என்று கேட்டான்.

காப்பாளனும் வழிப்போக்கனுக்கு எண்ணெய் கொடுத் தனுப்பினான்.

மூன்றாம் நாளும் இதே கதை தொடர்ந்தது. இப்போது கதவைத் தட்டியது ஒரு மூதாட்டி. “ராசா. நீ நல்லாயிருக்கனும். வீட்டில் பச்சைக் குழந்தைக்குப் பால் காய்ச்ச அவசரமாக அடுப்பு எரிக்கணும். வீட்டில் எண்ணை தீர்ந்து போய் விட்ட தப்பா! எனக்கு உன்னை விட்டால் வழியில்லை என்று வந்து விட்டேன்.”, என்றாள்.

அவளுக்கும் காப்பாளன் எண்ணெய் கொடுத்தான். வாரக் கடைசி. அடுத்த வாரத்திற்கான எண்ணெயைக் கொண்டு வரும் வண்டி வர இரண்டு நாளாகும். காப்பாளன் வழக்கம் போல விளக்கிற்கு எண்ணெய் நிரப்ப பார்த்தான். இருந்த எண்ணெய் வாரக் கடைசி வரை விளக்கை எரிக்கப் போதாது என்று புரிந்தது.

இருந்த எண்ணெயை விளக்கில் நிரப்பி அதை எரிய விட்டு விட்டு பதறிப் போய் ஊருக்குள் ஓடினான். மிக அவசரமாக விளக்கிற்கு எண்ணெய் தேவை. கடன் வாங்கியவர் கள் திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று கேட்டான். எல்லோரும் கை விரித்து விட்டார்கள்.

வாரக் கடைசியில் இரவில் எண்ணெய் தீர்ந்து போய் விளக்கு அணைந்து விட்டது. இரண்டு கப்பல்கள் அன்று இரவு கலங் கரை விளக்கு எரியாததால் வழி தவறிப் போய் பாறையில் மோதிச் சிதறி விட்டன.

மூன்று பேருக்கு உதவுவதற்காக தன் முதன்மைக் கடமையில் தவறிய காப்பாளன், முன்னூறு பேரின் உயிர் சேதத்திற்குக் காரணமானான். இந்தக் கதைதான் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் உட்பட சிலர் கைதுசெய்யப்பட்டு கட்டாய தனிமைப் படுத்தலுக்கு எதி ராக ஆசிரியர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இணையவழிக் கல்விச் செயல்பாடுகளில் ஈடுபடுவதை தவிர்த்து வருகின்றனர்.

அரசின் செயல்பாடுகள் அராஜகமானவையேதான். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இவர்கள் போராட்டம் நடாத்தியது கொத்தலாவலை பல்கலைக்கழக சட்ட மூலத்திற்கு எதிராக. அது ஆசிரியர் சங்கம் மாத்திரம் கவ லைப்படுகின்ற விடயமல்ல. ஆனாலும் அவர்கள் அதில் அக்கறைகாட்டியது தவறு என்றும் இந்த ஊர்க்குருவி வாதிடப் போவதில்லை.

ஆனால், அதற்காக அரசாங்கத்தின் நடவடிக்கையைக் கண் டிப்பதற்காக மாணவர்களின் கல்வியை புறக்கணிப்பது, ஆட்சி யாளர்களைத் தண்டிப்பதற்கு பதிலாக மாணவர்களை தண்டிப்பதாகி விடக்கூடாது.

ஏற்கனவே, கொரோனா நெருக்கடியால் மாணவர்களின் கல்விச் செயல்பாடுகள் பெரும் நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றன.

இந்த நேரத்தில் இணையவழிக் கல்வியை மாத்திரமே நம்பியி ருக்கும் மாணவர்களுக்கு அதனையும் வழங்காமல் ஆசியரியர்கள் பகிஷ்கரிப்பது குறித்து மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்று கோருவது தவாறானதாக தெரியவில்லை.

மற்றவர்களுக்கு உதவவேண்டும் என்பதற்காகத் தனக்கு தேவையான எண்ணெயை தானம் செய்துவிட்டு, தனக்கு இல்லா மல் அவதிப்பட்ட அந்த கலங்கரை விளக்கின் காவலாளியைப் போல ஆசிரியர்கள் நடந்துகொள்ளக் கூடாது. தமது கடமையைச் செய்துகொண்டே அரசாங்கத்துக்கு எதிராகப் போராடுவதற்கு பல வழிகள் இருக்கின்றன.

- ஊர்க்குருவி

# குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்ற நடவடிக்கை 28இல் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதி மன்ற அமர்வு எதிர்வரும் 28ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகவுள் ளது. இதனால், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நடவடிக்கைக ளின் கால ஒழுங்கில் மாற்றம் செய் யப்பட்டுள்ளது. இந்த அறி விப்பை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளர் ஜெ.ஜெய ரஞ்சன் வெளியிட்டுள்ளார்.

அதனடிப்படையில், எதிர்வரும் 28ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நடவடிக்கைகள் திங் கள், செவ்வாய், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகும். வெள்ளிக்கிழமைகளில் மதியம் ஒரு மணிக்கு ஆரம்பமாகும்.

அதேபோன்று யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற அமர்வு திங்கள், செவ்வாய், புதன் மற்றும் வியா ழக்கிழமைகளில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். வெள் ளிக்கிழமைகளில் முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் பதிவாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்ன லிங்கம் பிரேமசங்கர் மீண்டும் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் இரண்டு நீதிமன்ற நடவடிக்கைகளில் இவ்வாறு மாற்றம் கொண்டுவரப்பட்டுள் ளது. (ஐ)

## மன்னார் கல்வி வலய பணிப்பாளராக தேவதயாளினி நியமனம்!

வடமராட்சி, ஜூலை 16

மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளராக பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கடமையாற்றிய செல்வி தேவதயாளினி தேவ ராசா பொறுப்பேற்றுள்ளார்.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் அவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

யாழ். வேம்படி மகளிர் கல் லூரியில் ஆசிரியையாக கடமை யாற்றி இவர் இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்தமையை தொடர்ந்து வலிகாமம், மடு கல்வி வலயங் களில் பிரதிக் கல்விப் பணிப்பா ளராகக் கடமையாற்றியிருந்தார்.

பின்னர் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபராக கடமை யாற்றி வந்த இவர் தற்போது மன்னார் கல்வி வலயத்திற்கு பணிப்பாளராக நியமிக்கப்பட் டுள்ளார். (ஐ-2)

## எளிமை...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவை அனைத்தும் குறைந்த நீர், உரங்கள் மூலம் உற்பத்தி செய் யப்படுகின்றன. மரக்கூழ் அல் லது மூங்கில்கூழினால் உருவாக் கப்படும் செல்லுலோஸ் நார் கொண்டு ஆடைகள் வடிவ மைக்கவும் வழிகள் உள்ளன. ஆட்டின் முடியில் உள்ள புரதத் தின் மூலமாகவும் அன்னாசி இலை போன்ற விவசாயக் கழிவு கள், தக்கை மரப் பட்டைகள் மூலமாக வும் ஆடை வடிவ மைப்பிற்கான இழைகள் தயா ரிக்க ஆய்வுகள் நடந்துவருகின்றன.

எளிமை எனும் மந்திரம், தேவைக்கு அதிக மாக ஆடை கள் வாங்குவதனை தவிர்ப்பது டன் நம்மால் சுற்றுசூழலுக்கும் நமது வருங்கால சந்ததியினருக் கும் ஏற்படக்கூடிய பாதிப்பை யும் குறைக்கும் என்பதில் ஐய மில்லை.

### கல்வி tv CHANNEL-1 — 16.07.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறுஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

### கல்வி tv CHANNEL - 2 — 16.07.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | சிங்களம் |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu 16.07.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆனி 32

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# ஆலயங்கள் மீதான தாக்குதல்

மன்னாரில் கடந்த இரு தினங்களில் சில கத்தோலிக்க ஆலயங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. மன்னாரில் இதற்கு முன்னரும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இந்துக் கோவில்கள் தாக்கப்படுவதும் கத்தோலிக்க தேவாலயங்கள் தாக்கப்படுவதும் அவ்வப்போது இடம்பெறுவதுண்டு. இதன் பின்னணி என்ன? இதனை யார் செய்கின்றனர் என்று பொதுவெளியில் விவாதிக்கப்படுவதில்லை. அனைத்துமே இனம் தெரியாத நபர்கள் என்னும் பெயரிலேயே இடம்பெறுகின்றன.

மன்னார், கத்தோலிக்க மக்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு பகுதியாகும். இதனால் அங்குள்ள இந்து குழுக்களுக்கும் கத்தோலிக்க குழுக்களுக்கும் இடையிலான முரண்பாடு, நீறுபூத்த நெருப்பாகவே இருக்கின்றது. அரசியல் ரீதியில் மன்னார், தமிழ்த் தேசியக் கட்சிகளின் செல்வாக்கின்கீழ் இருக்கும் ஒரு பகுதியாகும். ஆனால், மன்னார் கத்தோலிக்க மதபீடத்தின் ஆசீர்வாதமின்றி, அங்கு எவருமே வெற்றிபெற முடியாது. வேட்பாளர் தெரிவிலிருந்து அனைத்துமே கத்தோலிக்க மதபீடத்தின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது. கத்தோலிக்க மதபீடத்தின் ஆதரவு எவருக்கு இருக்கின்றதோ அவரே தேர்தலில் வெற்றிபெற முடியும். இது, வெளியில் பகிரங்கமாகத் தெரிவதில்லை. ஆனால், திரைமறைவில் அவர்களின் கத்தோலிக்க கரமே பலமானது. இந்த பின்னணியில்தான் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் நீண்ட காலமாக பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வருகின்றார். தமிழ் அரசு கட்சியின் சார்பில் சார்ள்ஸ் நிர்மலநாதன் வெற்றிபெற்றதும் இவ்வாறானதொரு பின்புலத்தில்தான். இந்து மத பின்புலத்தை சேர்ந்த ஒருவர் மன்னாரில் வெற்றிபெறுவது என்பது முயல் கொம்பாகும்.

கத்தோலிக்க மத பீடத்தின் ஆதரவு தேவைப்படுவதால் மத விவகாரங்களில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எப்போதும் எட்ட நின்றுகொள்வதுண்டு. அதேவேளை, இந்து - கிறிஸ்தவ முரண்பாடுகள் ஏற்படுகின்றபோது அதற்குள் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதில்லை. பெருமளவிற்கு மன்னாரில் இயங்கும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் கத்தோலிக்க மதபீடத்தை திருப்திப் படுத்துவத்திலேயே கூடுதல் கவனம் எடுத்துக் கொள்வர். திருக்கேதீச்சர வளைவு விவகாரத்தில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கத்தோலிக்க குழுக்கள்மீது கண்டனம் தெரிவிக்கவில்லை. மதில் மேல் பூனையாகவே நின்று கொண்டனர்.

ஆனால் இது, பொது வெளியில் உரையாடப்படவேண்டிய விடயம். ஏன் மன்னாரில் மட்டும் இவ்வாறு நடக்கின்றது? இதற்கு என்ன காரணம்? அல்லது வேறு ஏதேனும் தீய சக்திகள் இதில் தொடர்புபடுகின்றனவா? அண்மைக்காலமாக தமிழ்த் தேசிய அரசியலுக்குள் மதவாத நிகழ்ச்சி நிரலை புகுத்தும் முயற்சிகளையும் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால், அது பெருமளவில் வெற்றிபெறவில்லை. ஈழத் தமிழ் மக்கள் இயல்பிலேயே மதவாதத்திற்கு எடுபடும் போக்குடையவர்கள் அல்லர். இதற்கு வட, கிழக்கை சேர்ந்த கத்தோலிக்க மதத் தலைவர்களின் செயல்பாடுகளும் ஒரு பிரதான காரணமாகும். கத்தோலிக்க மத குருக்கள் எப்போதும் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் குரல் கொடுப்பவர்களாகவே இருக்கின்றனர். மக்கள் போராட்டங்களின்போது மக்களோடு மக்களாக நிற்கின்றனர். இதுவும் தமிழ் மக்கள் மதத்தை அரசியலிலிருந்து பிரித்து நோக்குவதற்கு ஒரு காரணமாகும்.

ஆனால், இந்த நிலையில் மாற்றத்தை வளர விடக்கூடாது. அது, தமிழ் மக்களின் உரிமைப் பயணத்திற்கு உகந்த ஒன்றல்ல. தமிழர் என்னும் அடையாளத்தை போற்றுவதன் மூலமே இவ்வாறான உட்சிக்கல்களை கடந்துசெல்ல முடியும்.

# எளிமை எனும் மந்திரம்

முன்பெல்லாம் நம் குடும்பங்களில் மூத்த பிள்ளைக்கு வாங்கப்படும் ஆடைகள், இளைய பிள்ளைக்கு உபயோகப்படுத்தப்பட்டன. அதன் பிறகு அந்த ஆடைகள் நைந்த துணியாகி வீட்டை சுத்தம் செய்யப் பயன்படுத்தப்பட்டன. ஆனால், தற்போது அப்படியல்ல. விரைந்து வளரும் பொருளாதார வளர்ச்சியும் நடுத்தர வர்க்கத்தின் பெருக்கமும் அதிக நுகர்வுக்கு வழிவகுக்கின்றன.

ஒரு வாடிக்கையாளர் 2000ஆம் ஆண்டில் வாங்கியதை விட 60 சதவீதம் அதிக ஆடைகளை 2014ஆம் ஆண்டில் வாங்கினார் என்கிறது ஒரு தரவு. தேவை அடிப்படையில் ஆடைகள் வாங்குவது என்ற நிலை மாறி தற்போது ஆர்வ அடிப்படையில் வாங்குதல் என மாற்றம் கண்டுள்ளது. அன்றைய நுகர்வோர் தர உத்தரவாதம் கொண்ட ஆடைகளை வாங்கினர். இன்றைய நுகர்வோர், குறைந்த விலையில் புதுப்பாங்கான ஆடைகளை விரும்புகிறார்கள்.

2000ஆம் ஆண்டை ஒப்பிடும்போது இன்று ஒரு நுகர்வோர் இரு மடங்கு ஆடைகளை வாங்கும்போதிலும் அவர் அந்த ஆடைளை உபயோகிக்கும் காலஅளவு பாதியாகக் குறைந்துவிட்டது. பருத்தி விளைவிக்க உபயோகப்படுத்தப்படும் தண்ணீர், உரம், பூச்சிக்கொல்லிகள், துணி தயாரிக்கத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் பிற வளங்கள் கொண்டு உருவாக்கப்படும் ஆடைகள் மிக விரைவாக நுகரப்பட்டு இறுதியில் கழிவாகப் பூமியில் வீசப்படுகின்றன.

2015 ஆம் ஆண்டில் மட்டும் உலக ஆடை வடிவமைப்புத் துறை 7,900 கோடி கன மீற்றர் தண்ணீரை உறிஞ்சி 171.5 கோடி தொன் கரியமில வாயுவை உமிழ்த்தது என்று 'குளோபல் பஷன் அஜென்டா' என்ற அமைப்பு மதிப்பிட்டுள்ளது. ஒரு சோடி வன் துணியாடை (ஜீன்ஸ்) தயாரிப்பு முதல் அதனை வாடிக்கையாளருக்கு வழங்குவது வரை 3,781 லீற்றர் தண்ணீரை எடுத்துக்கொள்வதாக ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட புள்ளிவிவரம் கூறுகிறது.

எலன் மாக் ஆர்தர் அறக்கட்டளையின் கூற்றுப்படி, உலகளாவிய ஆடை வடிவமைப்பு தொழில்துறை ஒவ்வோர் ஆண்டும் சுமார் 5.3 கோடி தொன் நூலிழைகளை உற்பத்தி செய்கிறது. இதில் 70 வீதத்திற்கும் அதிகமானவை இறுதியில் கழிவாக நிலத்தில் புதைக்கப்படுகிறது அல்லது எரிக்கப்படுகிறது.

10 சதவீத உலகளாவிய வருடாந்திர காபன் உமிழ்விற்கு துணிகள் மற்றும் ஆடை வடிவமைப்புத் துறையே காரணம். இந்த உமிழ்வு, விமானம் மற்றும் கப்பல் ஆகிய இரண்டு துறைகளின் கூட்டு உமிழ்வைவிட அதிகம். துணிகள் மற்றும் ஆடைத்துறை, இந்த காபன் உமிழ்வின் வேகம் 2030ஆம் ஆண்டில் 60 சதவீதத்திற்கும் மேலாக அதாவது ஆண்டுக்கு கிட்டத்தட்ட 280 கோடி தொன்களாக அதிகரிக்கும் என்று கணிக்கப்படுகின்றது.

பருத்தி - செல்லுலோஸ் நூலிழைகள் போன்ற ஆடை வடிவமைப்பு மூலப்பொருட்களை விளைவிப்பதற்காக அழிக்கப்பட்ட காடுகளின் மொத்த பரப்பளவு 17வீதம் அதிகரித்துள்ளது. இது 2030இற்குள் இரட்டிப்பாகும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.



ஆடை வடிவமைப்பு மூலப்பொருட்களின் உற்பத்தி மற்றும் ஆடை தயாரிப்பு வழிமுறைகள் நிலத்தை மாசுபடுத்துகின்றன. ஒரு கிலோ துணி சாயமிடுவதற்கு 150 லீற்றர் தண்ணீர் தேவைப்படுகிறது. சுத்திகரிப்பின்றி வெளியேற்றப்படும் சாயக் கழிவுகள் நீர்நிலை மாசுபட்டை உருவாக்கும். உலகளாவிய தொழில்துறை நீர் மாசுபாட்டால் சுமார் 20 வீதம் சாயமிடுதலால் உருவாகிறது.

விலங்கு உரிமை அமைப்புகள் தொழில்துறைக்குக் கொடுக்கும் அழுத்தம் காரணமாக ஆடை வடிவமைப்பு தொழிலில் பாலிவினைல் குளோரைட் மற்றும் பாலியூரிதீன் என இரு வடிவங்களில் செயற்கை இழைகள் பயன்படுத்தப்படுகின்றன. பெற்றோலியத்தின் வழித்தோன்றல்களான இவை, விலங்கு அல்லது தாவர அடிப்படையிலான துணிகளுக்கு சரியான மாற்றுதான். ஆனாலும், பொலிவினைல் குளோரைட் மற்றும் பொலியூரிதீன் ஆகியவற்றை பெற்றோலில் இருந்து பிரித்தெடுப்பது, நீர் மற்றும் இரசாயன பயன்பாடு மற்றும் இவற்றின் மக்காத தன்மை சுற்றுச்சூழலில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

ஆடைகளின் செயற்கை இழைகள் மெல்ல மெல்ல கடல் வாழ் உயினங்களை அழிக்கின்றன. கலிபோர்னிய பல்கலைக்கழகத்தின் ஆய்வு, செயற்கை இழையிலான ஆடை ஒன்று, துவைக்கப்படும் ஒவ்வொரு முறையும் சராசரியாக 1.7 கிராம் நுண்ணிய இழைகளை வெளியிடுவதாகக் கண்டறிந்துள்ளது. ஒவ்வோர் ஆண்டும் ஐந்து இலட்சம் தொன் நுண்ணிய இழைகள் கடலில் கலக்கின்றன.

ஆடை வடிவமைப்பு நூலிழைகளை மறுசுழற்சி செய்தால் சுற்றுச்சூழல் பாதிப்பு குறையும். மறுசுழற்சி மூலம் நூலிழைகள் தயாரிப்பு, செயற்கை இழை தயாரித்தலில் 75 வீதத்தையும் காபன் உமிழ்வினில் 40 வீதத்தையும் குறைப்பதாக கலிபோர்னியா சூழல் நலத் தொழில்நுட்ப ஆடை அடையாள அமைப்பு 'படகோனியா' மதிப்பிட்டுள்ளது.

மறுசுழற்சியில் உற்பத்தி செய்யப்படும் செயற்கை இழையின் உற்பத்தி செலவு புதிதாக உற்பத்தி செய்வதைவிட 10வீதம் அதிகம். மறுசுழற்சிக்கான உற்பத்தி செலவை தொழில் நுட்பம் குறைக்கும் வரை ஆடைகள் வாங்குதல், உபயோகப்படுத்துதல் போன்றவற்றில் தனிமனிதக் கட்டுப்பாடு காலத்தின் கட்டாயம்.

சணல், ஆளி, மூங்கில், பருத்தி ஆகியவற்றின் இழைகளைக் கொண்டு வடிவமைக்கப்படும் ஆடைகள் மக்கும் தன்மை கொண்டவை. (02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூலை - 16 வியாழக்கிழமை
பிலவ வருடம் - ஆனி 32
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சப்தமி




**மேடம்**
தொழில் முன்னேற்றம் உண்டாகும். பதவி உயர்வு வரும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்துவதற்கான வாய்ப்பு கைகூடும். பிரியமானவர்களின் அன்பு கிடைக்கும். மனம் நிம்மதியுறும்.

**இடபம்**
சில நேரங்களில் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் அன்பும் ஆதரவும் உண்டு. பொறுமையால் வாழ்வில் பல நன்மை கிடைக்கப் பெறுவீர்கள்.

**மிதுனம்**
அலைச்சலுக்கேற்ற ஆதாயம் உண்டு. பொறுமையுடன் இருங்கள். திடீர் அதிர்ஷ்டத்தை எதிர்பார்க்கலாம். தேவையற்ற பயம் வரும். குடும்பத்தாரின் விருப்பத்தைக் கேட்டறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்**
திடீர் நன்மை அடைவீர்கள். பணப்புழக்கம் கணிசமாக உயரும். நீண்டநாள் விருப்பம் ஒன்று நிறைவேறும். மனதில் நிம்மதி நிலைக்கும். பலநாட்களாகத் தள்ளிப்போனவை நல்ல முடிவு கிடைக்கும்.

**சிம்மம்**
உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனசாட்சிப்படி செயல்படுவீர்கள். விட்டுப்போன வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். பாக்கிகள் வசூலாகும். கடன் வாங்குவதைத் தவிர்ப்பது நல்லது.

**கன்னி**
புதுவாய்ப்பு கிடைக்கப் பெறுவீர்கள். நேர்மையால் நன்மை காண்பீர்கள். விமர்சனங்களைக் கண்டு டென்ஷன் ஆகாதீர்கள். வெறுப்பாக பேசி குடும்பத்தினரை வருத்தத்துக்கு ஆளாக்க வேண்டாம்.

**துலாம்**
புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். உழைப்புக்கான பலன் வரும். எதிர்பாரத வகையில் விரும்பிய பொருட்கள் கைக்கு வந்து சேரும். மற்றவர்களுக்கு விளையாட்டாகக் கூட தீங்கு ஏற்படுத்த வேண்டாம்.

**விருட்சிகம்**
விருப்பம் ஒன்றை நிறைவேற்றிக் கொள்ளப் போராட வேண்டியிருக்கும். தாயாரால் நன்மை உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். சாதனை செய்ய பொருத்தமான காலகட்டம்.

**தனுசு**
பெரியோருக்கு நன்மை செய்து நல்லாசி பெறுவீர்கள். வயதானவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். பணம் வரும். குடும்பத்தினரின் அன்பும் அரவணைப்பும் நிம்மதிக்கு வழிவகுக்கும்.

**மகரம்**
பணியிடத்தில் விரும்பிய சலுகை கிடைக்க வாய்ப்புள்ளது. ஆதரவாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். நண்பரகள் உதவுவர். அடுத்தவர் களை குறைகூறிப் பிரச்னையில் சிக்கிக் கொள்ளாதீர்கள்.

**கும்பம்**
வளைந்து கொடுக்க வேண்டிய அவசியம் நேர்ந்தால் தயங்காதீர்கள். சம்பாதிப்பதற்குக் குறுக்கு வழிகளை நாடி சங்கடத்தில் மாட்ட வேண்டாம். அரசு வகையில் பலன் கிடைக்கும். உடல்நிலை சீராகும்.

**மீனம்**
அதிகார பதவியில் இருப்பவர்கள் அறிமுகத்தால் நன்மை நடக்கும். பொது விஷயங்களில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். அந்தஸ்து கூடும். குழந்தைகளால் சந்தோஷம் காண்பீர்கள். பெற்றோரின் ஆதரவு உண்டு.

# திருச்சி சிறப்பு முகாமிலிருந்து 10 ஈழத் தமிழர்கள் விடுதலை



*திருச்சி, ஜூலை 16*

திருச்சி சிறப்பு முகாமிலிருந்து முதல் கட்டமாக பத்து ஈழத் தமிழர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

முதற்கட்டமாகவே இந்த 10 பேரும் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர் எனவும், மற்றையவர்களை கட்டம் கட்டமாக விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

விடுதலை செய்யப்பட்ட 10 பேரும் அவர்களின் சொந்த விருப்பத்தின் பேரில் இலங்கைக்கு திரும்புவார்கள் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமது விடுதலையை வலியுறுத்தி திருச்சி சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழ்க் கைதிகள் கடந்த மாதத்தில் தொடர்ச்சியான கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்து வந்தனர்.

"விடுதலை செய்யுங்கள் அல்லது கருணைக் கொலை செய்யுங்கள்" என்ற கோரிக்கையுடன் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிலையில், அகதிகள் மறுவாழ்வுத் துறை அமைச்சர் மஸ்தான், உட்பட அதிகாரிகள் நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டு அவர்களுடைய விடுதலைக்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கொடுத்த வாக்குறுதியையடுத்தே அவர்கள் போராட்டத்தை இடைநிறுத்தினார்கள்.

இந்தப் பின்னணியிலேயே 10 கைதிகள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

# பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு இந்திய குடியுரிமை?

## ஒன்றிய அரசு விளக்கமளிக்க நீதிமன்றம் உத்தரவு

*மதுரை, ஜூலை 16*

இலங்கை பெருந் தோட்டத் தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு இந்திய குடியுரிமை வழங்கும் விவகாரத்தில் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், ஒன்றிய அரசு விளக்கமளிக்க மதுரை உயர் நீதிமன்ற கிளை நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

திருச்சி - கொட்டப்பட்டு இலங்கை அகதிகள் தனிமுகாமில் உள்ள பலர் தங்களுக்கு இந்திய குடியுரிமை கேட்டு உயர் நீதிமன்ற மதுரை கிளையில் ஏற்கனவே மனு செய்திருந்தனர்.

மனுவில் "நாங்கள் தமிழகத்தை பூர்வீகமாகக் கொண்டவர்கள். பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் எங்களின் மூதாதையர்கள் பிழைப்புக்காக இலங்கையில் உள்ள தேயிலைத் தோட்டங்களுக்கு கூலித் தொழிலாளர்களாக சென்றனர். 1983இல் இலங்கையில் இனக்கலவரம் ஏற்பட்டது. உயிருக்கு பயந்து தமிழகம் வந்தோம். உரிய பயண ஆவணங்கள்இல்லாமல்சட்டவிரோதமாக படகுகளில் வந்ததால் அகதிகள் முகாமில்தங்கவைக்கப்பட்டோம்.

இந்திய குடியுரிமை கேட்டு ஒன்றிய, மாநில அரசுகளுக்கு தொடர்ந்து மனு அளித்து வருகிறோம். இருப்பினும் எங்களுக்கு இந்திய குடியுரிமை சான்று வழங்கவில்லை. எங்களை அகதிகளாக கருதாமல், தாயகம் திரும்பியவர்களாக கருதி இந்திய குடியுரிமை வழங்க உத்தரவிட வேண்டும்" என கூறியிருந்தனர்.

இந்த மனுக்களை விசாரித்த தனி நீதிபதி மனுதாரர்கள் தங்களுக்கு இந்திய குடியுரிமை கேட்டு புதிதாக அந்தந்த மாவட்ட கலெக்ட்ரகளிடம் விண்ணப்பிக்க வேண்டும். கலெக்டர்கள் இந்த விண்ணப்பங்களை தாமதமின்றி ஒன்றிய அரசுக்கு பரிந்துரைத்து அனுப்பி வைக்க வேண்டும். தொழில்நுட்ப காரணங்களைக் கூறி நிராகரிக்க நினைக்கக்கூடாது. என உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவை அதிகாரிகள் நிறைவேற்றாததால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பின் கீழ் நடவடிக்கை எடுக்கக்கோரி சுப்ரமணியம் என்பவர், உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மனு செய்திருந்தார். இந்த மனுவை நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் விசாரித்தார். அப்போது ஒன்றிய அரசு தரப்பில் அவகாசம் கேட்கப்பட்டது.

இதையடுத்து, இந்த விவகாரத்தில் ஒன்றிய அரசு தரப்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தொடர்பான விவரத்தை கண்டிப்பான முறையில் கேட்டு தெரிவிக்க வேண்டுமென கூறிய நீதிபதி விசாரணையை 2 வாரங்களுக்கு ஒத்திவைத்தார்.

# தமிழக அனைத்து கட்சி குழு நேற்று புதுடில்லி விரைந்தது!

## பிரதமர் மோடியுடன் இன்று முக்கிய பேச்சு

*சென்னை, ஜூலை 16*

சர்ச்சைக்குரிய மேகதாது அணை விவகாரம் தொடர்பாக, பிரதமரைச் சந்திப்பதற்காக தமிழகத்தின் அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு நேற்று புதுடில்லி புறப்பட்டது.

மேகதாது அணையைக் கட்ட தமிழகம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகிறது. ஆனால், அணையைக்கட்டியே தீருவோம் என்று அதற்கான முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளார் கர்நாடக முதல்வர் எடியூரப்பா.

கடந்த 12ஆம் திகதி முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற சட்டப்பேரவை அனைத்து கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தில், உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, காவிரியின் கீழ்படுகை மாநிலங்களிடம் அனுமதி பெறாமல், மேகதாதுவில் எந்த கட்டுமானப் பணியையும் மேற்கொள்ளக்கூடாது. கர்நாடக அரசின் திட்டத்திற்கு, மத்திய அரசு எவ்விதமான அனுமதியையும் பெறக்கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒன்றிய அரசைப் பொறுத்தவரையில் மேகதாது விவகாரத்தில், காவிரி கீழ்படுகை மாநிலங்களின் முடிவை கேட்க ஆலோசனை நடத்த திட்டமிட்டுள்ளது. இதற்காக நான்கு முதலமைச்சர்களுடன் பேசுவதற்கு ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது.

இந்த நிலையில் தமிழகத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப் பிரதமரிடமும், ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சரிடமும் கொடுப்பதற்காக, சட்டப்பேரவை அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு நேற்று டில்லி விரைந்தது. இக்குழு இன்று பிரதமர் நரேந்திர மோடி, ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத் ஆகியோரை சந்தித்து, மேகதாது விவகாரம் உள்பட பல்வேறு பிரச்னைகள் குறித்து மனு அளிக்க உள்ளது.

# கொரோனாவால் இறந்த 1,001 பேரின் சடலங்கள் ஓட்டமாவடியில் அடக்கம்

மட்டக்களப்பு, ஜுலை 16
கட்டாய தகனக் கொள்கைளை கடந்த மார்ச் மாதம் முதல் இலங்கை முடிவுக்குக் கொண்டுவந்ததில் இருந்து இதுவரை கொரோனாவால் உயிரிழந்த 1,000 க்கும் அதிகமானோரின் சடலங்கள் மட்டக்களப்பு - ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மஜ்மா நகர கொரோனா மையவாடியில் அடங்கம் செய்யப்பட்டுள்ளன.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த 1,001 பேரின் சடலங்கள் நேற்று முன் தினம் வரை ஓட்டமாவடியில் புதைக்கப்பட்டதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானா தெரிவித்தார்.

ஓட்டமாவடியில் நேற்று முன் தினம் வரை கொரோனா தொற்று நோயால் உயிரிழந்த 946 முஸ்லிம்கள், 24 இந்துக்கள், 16 கிறிஸ்தவர்கள் மற்றும் 15 பௌத்தர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டன எனவும் அவர் கூறினார்.

தொற்று நோயால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் உடலை புதைக்க அனுமதி மறுத்து கிட்டத்தட்ட ஒரு வருட காலமாக கட்டாய தகனக் கொள்ளையை இலங்கை பின்பற்றியது.

கடும் சர்வதேச அழுத்தங்களின் பின்னரே கட்டாய தகனக் கொள்ளையை இலங்கை அரசு முடிவுக்குக் கொண்டுவந்து புதைப்பதற்கான அனுமதியை இந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறையில் தேர்த் திருவிழாவில் பங்கேற்ற கொரோனா தொற்றாளர்கள்

## தீர்த்த திருவிழாவில் பக்தர்களுக்கு தடை

யாழ்ப்பாணம், ஜுலை 16

**பருத்தித்துறை சிவன் கோவில் தேர்த் திருவிழாவில் கொரோனா தொற்றாளர்களும் பங்கேற்றமை உறுதி செய்யப்பட்டுள்ளதை அடுத்து நேற்று தீர்த்த திருவிழாவில் பக்தர்கள் பங்கேற்க சுகாதாரப் பிரிவினரால் தடை விதிக்கப்பட்டது.**

இது குறித்து மேலும் தெரிய வருகையில்,

பருத்தித்துறை நகரில் அமைந்துள்ள சிவன் கோவில் வருடாந்த திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

ஆரம்பத்தில் பக்தர்கள் பங்கேற்பின்றி திருவிழாக்கள் நடைபெற்று வந்த நிலையில் ஆலயத் திருவிழாக்களை 150 பேருடன் நடத்தலாம் என்று திருத்தப்பட்ட சுற்றறிக்கை வெளிவந்ததை அடுத்து தேர்த்திருவிழா பக்தர்கள் பங்கேற்புடன் நேற்று முன்தினம் நடைபெற்றிருந்தது.

இந்நிலையில், பருத்தித்துறை 1 ஆம், 2 ஆம், 3 ஆம் குறுக்குத்தெருவில் எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் நேற்று முன் தினம் வெளியாகி இருந்தன. இதன்போது குறித்த பகுதியில் 19 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இவ்வாறு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் சிலர் பருத்தித்துறை சிவன் கோவில் தேர்த் திருவிழாவில் பங்கேற்றிருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்தே, சிவன் கோவில் தீர்த்த திருவிழாவில் பக்தர்கள் பங்கேற்க பருத்தித்துறை சுகாதாரப் பிரிவினரால் தடை விதிக்கப்பட்டது.

இது குறித்த அறிவுறுத்தல் நேற்று முன் தினம் இரவு 10 மணியளவில் ஆலய நிர்வாகத்துக்கு சுகாதாரப்பிரிவினரால் வழங்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக நேற்று தீர்த்த திருவிழாவானது ஆலய பூசகர்கள், நிர்வாகத்தினர் மட்டும் பங்கேற்கும் வகையில் ஆலயத்துக்குள்ளே நடத்துவதற்கு சுகாதாரப் பிரிவினரால் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட நபர்கள் பங்கேற்ற தேர்த் திருவிழாவில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் மின் தாக்கி 6 வயது சிறுவன் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜுலை 16
மட்டக்களப்பு, சின்ன ஊறணி பகுதியில் மின்சாரம் தாக்கி 6 வயது சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் நேற்று முன் தினம் பதிவாகியுள்ளது.

சின்னஊறணி 3 ஆம் குறுக்கு வீதியைச் சோந்த தரம் 2 இல் கல்வி கற்கும் 6 வயதுடைய விநாயகம் விதுஷன் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார்.

வீட்டு நிர்மாணப் பணிகளின்போது தவறுதலாக மின்சார வயர் ஒன்றை சிறுவன் பிடித்ததையடுத்து, மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளான்.

பின்னர் உறவினர்கள் சிறுவனை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் அவன் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு நீதவானின் உத்தரவையடுத்து சிறுவனின் சடலம் பிரதேச பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# ஓமந்தையில் மாட்டுடன் மோதியது வாகனம்

வவுனியா, ஜுலை 16
வவுனியா ஓமந்தை பகுதியில் மாட்டுடன் மோதுண்டு வாகனம் விபத்துக்குள்ளாகியது.

புளியங்குளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி சென்ற ஹன்ரர் ரக வாகனம் ஓமந்தை இறம்பைக்குளம் சந்தியில் சென்றுகொண்டிருந்த போது மாடு குறுக்கிட்டமையால் விபத்துக்குள்ளானது.

விபத்தில் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீதியை விட்டு விலகிய நிலையில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

# 3 வயது சிறுமி துஷ்பிரயோகம் தந்தை உட்பட ஐந்து பேர் கைது

கொழும்பு, ஜுலை 16
நாவலப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 13 வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அவரின் தந்தை உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனரென பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் மேலும் 6 பேர் கைது செய்யப்பட உள்ளனரென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

# வாகன சாரதிகள் அபராதம் செலுத்துவதற்கு புதிய முறை

கொழும்பு, ஜுலை 16
வாகனச் சாரதிகள் அபராதத்தை மின்னணு முறையில் செலுத்துதல் மற்றும் சாரதிகளுக்கான புள்ளிகளை வழங்கும் முறையை விரைவில் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

புள்ளிகள் வழங்கும் முறையை செயல்படுத்த சட்டங்கள் மற்றும் தரவு அமைப்புகள் இருக்கின்றபோதிலும் அதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், வீதிகளில் யாசகம் எடுப்பதை தடுத்து நிறுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறினார்.

# முல்லைத்தீவு வைத்தியசாலையில் முதல்முறை முழங்கால் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை!

முல்லைத்தீவு, ஜுலை 16
முழங்கால் மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சை கடந்த 12ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை வரலாற்றில் முதல் முறையாக வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் தனி எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு இல்லை என்றாலும், இந்த பெரும் அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பல வளப் பற்றாக்குறைகள் இருந்தபோதிலும், மருத்துவர்களின் அர்ப்பணிப்பான சேவையால் இது முதல் முறையாக ஒரு வரலாற்று சாதனையாக கருதப்படுகிறது.



மயக்க மருந்து நிபுணர் மருத்துவர் சந்தருவன் பண்டார ஹேரத் மற்றும் மருத்துவ அதிகாரிகள், தாதியர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள் உள்ளடங்கலாக யாழ்.போதனா வைத்தியசாலை எலும்பு முறிவு அறுவைச் சிகிச்சை நிபுணர் மருத்துவர் சுந்தரலிங்கம் சுதர்ஷன் தலைமையிலான குழுவினர் இந்த சாதனையை வெற்றிகரமாக செய்துள்ளனர்.

மூட்டு வாதத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணுக்கு இந்த அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட வைத்தியசாலையின் சேவைகளை விரிவுபடுத்துவதில் மும்முரமாக இருக்கும் வைத்திய அத்தியட்சகர் மற்றும் வைத்திய குழுவினர் இந்த சாதனைக்கு மத்திய மற்றும் மாகாண சுகாதார அமைச்சுகளின் ஆதரவுக்கும், பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளரின் ஆதரவுக்கும் மற்றும் நன்கொடையாளர்களின் ஆதரவுக்கும் நன்றி தெரிவித்துள்ளனர்.

இந்த அறுவைச் சிகிச்சை வளக் குறைபாடுகளுடன் எலும்பியல் அறுவைச் சிகிச்சைக்கு தனி சத்திரசிகிச்சை கூடம் இல்லாத நிலையில் கிருமிநீக்கம் செய்யப்பட்ட பொது சத்திரசிகிச்சை கூடத்தில் மேற்கொள்ளப்பட்டது.

# வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் நிபந்தனைகளுடன் வர அனுமதி

கொழும்பு, ஜுலை 16
கொரோனா தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்டுள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், இலங்கைக்கு சுற்றுலா மேற்கொள்ள நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டுக்குள் வந்த பின்னர் முதலாவது தினத்தில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர் பரிசோதனையில் தொற்று உறுதியாகவில்லையாயின் அவர்கள் இலங்கையின் எந்த பாகத்துக்கும் சுற்றுலா செல்ல அனுமதி வழங்கப்படும் என சுற்றுலா அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதேநேரம், சுற்றுலா மேற்கொண்டுள்ள 7ஆவது தினத்தில், சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனை நிலையத்தில் அவர்கள் மீண்டும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அனைத்து சுற்றுலாப் பயணிகளும் இலங்கை வருவதற்காக விமானத்தில் பயணிப்பதற்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்னர் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதியாகவில்லை என்பதற்கான ஆவணத்தையும் வைத்திருக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அடுத்த சில நாட்களுக்கு மழையுடனான வானிலை

கொழும்பு, ஜூலை 16

வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்திலும் பல இடங்களில் நேற்றிலிருந்து அடுத்த சில நாட்களுக்கு மாலையில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

சப்ரகமுவ, மேல், மத்திய மற்றும் தென் மாகாணங்களில் பல முறை மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டை சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென் மேற்கு அல்லது வடமேற்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

கொழும்பிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன்கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களின்போது மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

# பேச்சுக்கு வாருங்கள்!

## ஆசிரியர்களை அழைக்கிறார் நாமல்



**கொழும்பு, ஜூலை 16**

**வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தமது பிரச்னைகள் குறித்து தம்முடன் கலந்துரையாட வருமாறு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.**

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவிக்கையில்-

ஆசிரியர்கள் தங்கள் கவலைகளை வெளிப்படுத்த உரிமை உண்டு. இருப்பினும் மாணவர்களின் கல்வி குறித்து அக்கறையுடன் இருக்கவேண்டும். பாடசாலைகள் மூடப்பட்டு குழந்தைகள் 'ஒன்லைன்' கல்வியை நம்பியுள்ள நேரத்தில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்கவேண்டும்.

அரசாங்கம் மற்றும் பொலிஸாருடனான கவலைகள் தொடர்பாக விவாதங்களை நடத்த முடியும். இருப்பினும் மாணவர்கள் தவறு செய்யவில்லை. இன்னும் அவர்கள் விலை கொடுக்கிறார்கள்-என்றார்.

அண்மையில் நடந்த போராட்டத்தின்போது பொலிஸாரின் நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோது, இது குறித்து பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடியதாகக் அமைச்சர் நாமல் குறிப்பிட்டார். இருப்பினும் தனிமைப்படுத்தல் சட்டங்கள் மீறப்பட்டமை ஒரு பிரச்னையாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

ஆசிரியர்கள், மாணவர்களுக்கு முன்மாதிரியாக செயல்பட வேண்டும். நடவடிக்கைகளை எடுக்கும்போது மாணவர்களைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்றும் நாமல் கூறினார்.

# அவுஸ்திரேலியாவில் தமிழ் இளைஞன் கைது!

சிட்னி, ஜூலை 16

அவுஸ்திரேலியாவில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட கஜேந்திரமோகன் என்ற தமிழ் இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் சிட்னி நகரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளாரென அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில், கைதான குறித்த நபர் மேற்கு அவுஸ்திரேலியாவிலுள்ள குடிவரவு தடுப்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளாரெனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# 'பப்பி' கைது

கொழும்பு, ஜூலை 16

தங்காலை பகுதியில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த பிரதான சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பப்பி என அழைக்கப்படும் 36 வயதுடைய படகோட்டி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் ஒரு தொகை போதைப்பொருளை தனது படகில் அவர் எடுத்து வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது சில ஆயுதங்களையும் அவர் எடுத்து வந்ததாக தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

# அதிபர், ஆசிரியர், கல்விசாரா ஊழியரென யாழில் 72 வீதமானவர்களுக்கு தடுப்பூசி!

யாழ்ப்பாணம், ஜூலை 16

ஆசிரியர், அதிபர், கல்விசாரா ஊழியர்களென யாழ்ப்பாணத்தில் 72 வீதமானவர்களுக்கு சினோபார்ம் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பாடசாலை சார்ந்த 7 ஆயிரத்து 432 இதுவரை சினோபார்ம் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

பாடசாலைகளை மீளவும் ஆரம்பிக்கும் வகையில் ஆசிரியர், அதிபர், கல்விசாரா ஊழியர்களுக்கு நாடு முழுவதும் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது.

கடந்த வாரம் முதல் இரண்டாம் கட்டத்துக்கான முதல் டோஸ் தடுப்பூசியை யாழ். மாவட்டத்தில் 51 ஆயிரத்து 390 பேர் இதுவரை பெற்றுக்கொண்டனர்.



# வெளிநாட்டு தூதுவர்களுடன் நிதியமைச்சர் பஸில் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 16

புதிதாக நியமிக்கப்பட்ட நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கொழும்பில் உள்ள பல தூதுவர்களை சந்தித்துள்ளார்.

அமெரிக்கா, சீனா, ரஷ்யா, ஜேர்மனி, ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய இராச்சியம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் தூதுவர்களையே அமைச்சர் சந்தித்தார்.

நிதி அமைச்சில் இந்த சந்திப்புக்கள் நடந்தன.

பேச்சின்போது, இலங்கை செழிப்புக் கொள்கையின் பார்வையைச் செயல்படுத்தும்போது பசுமை பொருளாதாரத்தை உருவாக்குவதில் அதிக கவனம் செலுத்தப்படும் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டுத் திட்டத்துக்கான ஆதரவைப் பெறும் என நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டெனிஸ் சைபி புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை மேம்படுத்துவதில் அரசாங்கம் காட்டிய ஆர்வத்துக்கு தங்கள் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளனர்.

இந்திய தூதுவர் கோபால் பாக்லே, இலங்கையின் பொருளாதார வளர்ச்சி முதல் காலாண்டில் கோவிட்-19 தொற்றுநோயையும் மீறி சுமார் 4.7% ஆக இருந்ததில் மகிழ்ச்சி அடைவதாகக் கூறினார். எதிர்காலத்தில் 5.5% ஆக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருதரப்பு வர்த்தக உறவுகளை மேலும் மேம்படுத்த இந்திய தூதுவர் ஒப்புதல் அளித்துள்ளார்.

சீனத் தூதர் குய் ஜென்ஹோங், இலங்கைக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள தடுப்பூசி வசதிகளை சீனா தொடர்ந்து வழங்குவதோடு, சீனாவின் சிறந்த முதலீட்டாளர்களை அம்பாந்தோட்டை தொழில்துறை மண்டலத்துடன் இணைக்கத் தயாராக உள்ளதாகவும் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு அறிவித்துள்ளார்.

கோவிட்-19 தொற்றுநோயை எதிர்கொண்டு இலங்கையின் பொருளாதாரம் சீக்கிரம் இயல்பு நிலைக்கு திரும்பும் என்று சீனா எதிர்பார்க்கிறது என்று தூதர் குய் ஜென்ஹோங் கூறினார்.

ஜேர்மன் தூதர் ஹோல்கர் லோதர் சீபர்ட், நாட்டில் தற்போதுள்ள ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரிகளின் வசதிகளை மேம்படுத்துவதாகவும், முதலீட்டாளர்களை சிறு மற்றும் நடுத்தர அளவில் ஈர்க்க தேவையான உதவிகளை வழங்குவதாகவும் தனது அரசாங்கம் நம்புகிறது என்று கூறினார்.

ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்தவும், பரஸ்பர புரிந்துணர்வில் இலங்கையுடன் பணியாற்றவும் அமெரிக்கா தயாராக இருப்பதாக அமெரிக்க தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் பசுமை பொருளாதார திட்டத்தை வரவேற்கும் அமெரிக்க தூதர், எல்.என்.ஜி எரிசக்தி திட்டத்திற்கு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கான சாத்தியத்தை ஆராய்வேன் என்று கூறியுள்ளார்.

அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடனான சந்திப்பில் ரஷ்ய தூதர் யூரி பி. மெட்டேரி, தடுப்பூசி திட்டத்திற்கு ரஷ்ய அரசாங்கம் தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று கூறியுள்ளார். தடுப்பூசிகள் தயாரிப்பதற்கான ஒரு கூட்டுத் திட்டத்தை வகுப்பதில் கவனம் செலுத்தப்படும் என்று ரஷ்ய தூதர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# 100 நகரங்கள் ஒரே தடவையில் அபிவிருத்தி இந்த மாத இறுதியில் ஆரம்பமாகும்

கொழும்பு, ஜூலை 16

நீண்ட காலமாக நாட்டில் அபிவிருத்தி செய்யப்படாத 100 நகரங்களை ஒரே தடவையில் அழகுபடுத்தி அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நகர அபிவிருத்தி அமைச்சின் முன்னேற்ற ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைக்கு அமைய பிரதான நகரங்கள் மற்றும் பிரதேச நகரங்களுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வுகளை குறைத்து, அனைத்து மக்களுக்கும் சமமான நகர வசதிகளை பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கமாகும்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை, சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் தொடர்பில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் குறித்த கூட்டத்தில் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்தார்.

நகர அபிவிருத்தி அதிகார சபை இதுவரை செயல்படுத்தும் 60,000 வீடுகள் திட்டத்தில் குறைந்த வருமானம் பெறுவோருக்காக நிர்மாணிக்கப்பட்டு வரும் 32,000 வீடுகளின் முன்னேற்றம் குறித்து பிரதமர் இதன்போது கேட்டறிந்தார்.

கொலன்னாவ, டொரிங்டன், புளுமெண்டல், பேலியகொடை மற்றும் ஒறுகொடவத்தை பிரதேசங்கள் மற்றும் கண்டி இ குருநாகல், அனுராதபுரம் மற்றும் பொலனறுவையில் புதிதாக செயற்படுத்தப்படும் நடுத்தர வகுப்பினருக்கான வீடமைப்புத் திட்டம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

குறைந்த வருமானம் பெறுவோருக்காக மஹரகம, நுகேகொடை மற்றும் கோட்டை ஆகிய பகுதிகளில் புதிதாக வீடமைப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், கோட்டை வீடமைப்பு திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தனியார் முதலீட்டாளர்களுடன் இணைந்து மேலும் 12,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தற்போதுள்ள நடைபாதைகளுக்கு மேலதிகமாக 25 மாவட்டங்களில் புதிதாக மேலும் 28 நடைபாதைகள் நிர்மாணிக்கப்படும்.

கொழும்பு நகரிலுள்ள பண்டைய கட்டடங்களை புனரமைப்பது தொடர்பில் கவனம் செலுத்திய பிரதமர், குறித்த கட்டடங்கள் புனரமைக்கப்பட்ட பின்னர் அவற்றை பராமரிப்பது தொடர்பில் கவனம் செலுத்துமாறு அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

புனரமைப்பின் பின்னர் அக்கட்டடங்கள் முறையாக பராமரிக்கப்படாவிடின் அவை மீண்டும் பழைய நிலைக்கு தள்ளப்படும் என பிரதமர் சுட்டிக்காட்டினார்.

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை இதுவரை நடுத்தர வருமானம் பெறுவோருக்காக 4000 வீடுகளை நிர்மாணித்து வருவதுடன், அத்திட்டம் 2024ஆம் ஆண்டு நிறைவு பெறும் என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.



# ‘இயக்கி’ உணவு விற்பனை நிலையம் திறந்துவைப்பு

கிளிநொச்சி, ஜூலை 16

’இயக்கி’ உணவு விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. குறித்த நிகழ்வு நேற்று காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் நிதிப் பங்களிப்பில், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தினால் நலிவுற்ற பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட ‘இயக்கி’ உணவு விற்பனை நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிலையத்தை கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்தார்.

குறித்த உணவகத்தில் பாரம்பரிய உணவுகள் விற்பனை செய்யப்படவுள்ளதுடன், மக்கள் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ஜெயராணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஆசிரியர்களை அவமதித்த கெஹலிய பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. கோரிக்கை




**கொழும்பு, ஜூலை16**

**“ஆசிரியர்கள் தொடர்பில் அவதூறாகக் கருத்துரைத்த ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, ஆசிரியர்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும்.”**

**- இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி. வலியுறுத்தினார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது:-

கொரோனா வைரஸ் தொற்றால் பாடசாலைகள் முடங்கியுள்ள சூழ்நிலையில், தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு தொழில்நுட்ப உதவியோடு மாணவர்களுக்கான கல்வியை ஆசிரியர்கள் மிகவும் அர்ப்பணிப்போடு முன்னெடுத்து வருகின்றார்கள்.

இந்த வகுப்புகளை முன்னெடுக்கின்றபோது அவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனினும், மாணவர்களின் நலனை கருதி பணியாற்றி வருகின்றனர். இவ்வாறு அர்ப்பணிப்புடன் தங்களுடைய கடமைகளை செய்து கொண்டிருக்கின்ற ஆசிரியர்களை அவமதிக்கும் வகையில், அவதூறாக அமைச்சர் கருத்து வெளியிடுவது வெறுக்கத்தக்க, கண்டிக்கத்தக்க விடயமாகும். எனவே, இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் ஆசிரியர் சமூகத்திடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும்.

இன்று ஆசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற நிலைமை நாளை ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்படலாம். எனவே, இன்று ஆசிரியர்களுக்கு எதிராகக் கருத்து தெரிவித்திருக்கின்ற அமைச்சருக்கு எதிராக பெற்றோர்கள் தங்களுடைய எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்- என்றார்.

(அ)

# தனிமைப்படுத்தலிலிருந்து தொழிற்சங்க தலைவர்கள் விடுவிக்கப்பட்டால் மட்டுமே கல்வி அமைச்சருடன் பேச்சு

## இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 16

தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள தொழிற்சங்கத் தலைவர்கள் விடுவிக்கப்பட்டால் மட்டுமே கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸுடன் கலந்துரையாட முன்வருவோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்ததாவது.

ஆசிரியர்கள் இணையவழிக் கற்பித்தல் நடவடிக்கைகளில் இருந்து விலகியதில் இருந்து நான்காவது நாள் நேற்றாகும்.

நாங்கள் கல்வி அமைச்சருடன் கலந்துரையாடல்களை நடத்தத் தயாராக உள்ளோம். இருப்பினும் வேலைநிறுத்தம் தொடரும்.

பல கவலைகள் இருக்கும் போது, தொழிற்சங்கங்களின் முதல் நிபந்தனை ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டோரை விடுவிக்கவேண்டும்.

பி.சி.ஆர். சோதனைகள் அவர்களுக்கு கோவிட்-19 நோய்த்தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. பொதுவாக கோவிட்-19 நோயாளிகளும் 10 நாட்களுக்கு மேல் தனிமைப்படுத்தலில் வைக்கப்படுவதில்லை.

எனவே, தொழிற்சங்கத் தலைவர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருப்பது பழிவாங்கும் செயலாகும். எனவே அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும்.

கலந்துரையாடலின் போது சாதகமான முடிவுகள் எட்டப்பட்டால், வேலைநிறுத்தம் நிறுத்தப்படும்-என்றார்.

# பளை முல்லையடி பகுதியில் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!



கிளிநொச்சி, ஜூலை 16

பளை முல்லையடி பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முல்லையடி பகுதியில் நேற்று அதிகாலை வாகனம் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

வவுனியா பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ஓட்டோ நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

விபத்தில் ஓட்டோவில் பயணித்த மூவரில் ஒருவர் மரணமானார் என பளை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பொல்காவலை பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய கோசல என்பவர் உயிரிழந்தார்.

அதில் பயணித்த மேலும் இருவர் காயமடைந்து பளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேர்தல்கள் கட்டுப்பணை தொகையில் திருத்தம்!

கொழும்பு, ஜூலை 16

அத்தியாவசிமற்ற வகையில் வேட்பாளர்கள், தேர்தல்களில் போட்டியிடுவதை தவிர்க்கும் வகையில், தேர்தல்களில் போட்டியிடும்போது செலுத்தவேண்டிய கட்டுப்பணத் தொகையில் திருத்தங்களை மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான அமைச்சரவைப் பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியால் இதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதாக அறிய முடிகின்றது.

இதனடிப்படையில், ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் உள்ளிட்ட அனைத்து தேர்தல்களிலும் செலுத்தவேண்டிய கட்டுப்பணத் தொகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தேர்தல்களில் களமிறங்கும் சுயாதீன வேட்பாளர்கள் மாத்திரம் கட்டுப்பணம் செலுத்த வேண்டுமென்ற நடைமுறையே தற்போது இருக்கின்றது. அந்த நடைமுறையை அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கும் வேட்பாளர்களும் செலுத்தும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் சுயாதீன வேட்பாளர் ஒருவர் 75,000 ரூபாயைக் கட்டுப்பணமாக செலுத்தவேண்டும். அந்த நடைமுறையே தற்போதும் அமுலிலுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி ஜனாபதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரால் 50,000 ரூபாய் கட்டுப்பணம் தற்போது செலுத்தப்படுகின்றது.

இந்நிலையில், குறித்த கட்டுப்பணத் தொகையை 30 இலட்சம் ரூபாய் வரை அதிகரிக்குமாறு அமைச்சரவைப் பத்திரத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

இந்நிலையில், தேர்தல்களில் செலுத்தப்படும் கட்டுப்பணத்தில் திருத்தங்களை மேற்கொள்ளும் வகையில், அமைச்சரவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரம் தொடர்பில், தாங்களும் அறிந்துகொண்டதாக தேசிய தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்களில் அத்தியவசியமின்றி வேட்பாளர்கள் களமிறங்குவதை தடுக்கும் வகையிலும் பொதுமக்களின் பெருமளவு பணம் வீணாக செலவிடப்படுவதை தடுக்கும் வகையிலுமே கட்டுப்பணத் தொகையில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# பருத்தித்துறை பொதுச் சந்தை வியாபாரிகள் மூவர் உட்பட ஐவருக்கு கோரோனா தொற்று

யாழ்ப்பாணம், ஜூலை 16

பருத்தித்துறை பொதுச் சந்தை மற்றும் அதனை அண்டிய சந்தை மேற்கு பகுதியில் சந்தேகத்துக்கு இடமானோரிடம் நேற்று முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜென் பரிசோதனையில் ஐவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களில் மூவர் சந்தை வியாபாரிகள் என்றும் இருவர் சந்தை மேற்கு பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

அதனால் பருத்தித்துறை சந்தையை தற்காலிகமாக மூடுவதா அல்லது கட்டுப்பாடுகளும் இயங்க அனுமதிப்பதா என்பது தொடர்பில் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

(அ-02)







## வாக்காளர் பதிவு ஆரம்பமாகியுள்ள நிலையில் நீங்கள் தெரிந்திருக்க வேண்டிய முக்கியமான தகவல்கள்

# வாக்காளராக பதிந்துகொள்வது வாக்களிப்பதற்கு மட்டுமல்ல!

**த.மனோகரன்**

இவ்வாண்டு அதாவது 2021 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவு அல்லது தேருநர் இடாப்பு புதுப்பித்தல் தற்போது தேர்தல் திணைக்களத்தால் மேற்கொள் ளப்பட்டு வருகின்றது. கடந்த காலங்களைப் போலல்லாது புதிய முறையில் இச்செயல்பாடு இடம்பெறுகின்றது.

முன்னைய காலத்தில் குறிப்பிட்ட ஆண்டுக்கான வாக்காளர் பதிவை மேற்கொள்வதற்காக அப்பகுதி கிராமசேவை அலுவலர் அல்லது இப்பணிக்காக தேர்தல் திணைக்களத்தால் நியமிக்கப்படும் விசேட அலுவலர்களிடம் சேவை பெறப்பட்டது. அவ்வலுவலர்கள் ஒவ்வொரு வீடுகளுக்கும் நேரில் சென்று உரிய படிவங்களைக் கையளித்து மீளப்பெறும் நடைமுறையிருந்தது. இவ்வாண்டு அந்த நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் இந்த ஆண்டுக்கான புதுப்பிக்கப்படும் வாக்காளர் இடாப்பில் அவ்வாறே உள்ளடக்கப்படும் என்று கூறப்படுகின்றது.

புதிதாக வாக்காளர் இடாப்பில் பெயர்களை உள்ளடக்க எதிர்பார்ப்போர் தாம் குடியிருக்கும் வீட்டின் பிரதம குடியிருப்பாளரின் சிபார்சுடன் உரிய விபரங்களை அதாவது முழுப்பெயர், பிறந்த திகதி, முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், ஆண், பெண் விபரம், பிரதம குடியிருப்பாளருக்குள்ள உறவு முறை, ஏற்கனவே வேறு முகவரியில் பதிவு செய்யப்பட்டிருந்தால் அந்த விபரம் போன்றவற்றை உள்ளடக்கிய ஆவணமொன்றைத் தமது பிரதேச தேர்தல்கள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

2021-06-01 ஆம் திகதியன்று 18 வயதைப் பூர்த்தி செய்தவர்களும், உரிய வயதும், வாக்காளர் தகைமை இருந்தும் கடந்த ஆண்டுகளில் வாக்காளர் இடாப்பில் பெயர்கள் உள்ளடக்கப்படாதவர்களும், புதிதாக குடியமர்ந்தவர்களும் தவறாது தமது பெயர்களை வாக்காளர் இடாப்பில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

வாக்காளர் இடாப்பில் பெயர்கள் இடம்பெறுவது தேர்தல்களில் வாக்களிப்பதற்கு மட்டுமல்ல என்பதை ஒவ்வொருவரும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும், தெரிந்து கொள்ள வேண்டும். தமது இருப்பிடத்தை உறுதி படுத்தவும், கடவுச் சீட்டு, பிறப்பு, இறப்பு சான்றிதழ் பெறவும், பிள்ளைகளை பாடசாலையில் அனுமதித்துக் கொள்ளவும், வேறு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளவும், தொழில் வாய்ப்புக்களைப் பெறவும், வங்கிச் செயல்பாடுகளை மேற்கொள்ளவும், இது போன்ற அன்றாட தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் குடியிருப்பை வெளிப்படுத்தும் தேவையுள்ளது.

ஒருவரின் இருப்பிடத்தை அதாவது முகவரியை உறுதிபடுத்தும் பொறுப்பு வாய்ந்த அரச அலுவலர் அப்பகுதி கிராமசேவை அலுவலராவார்.

ஒவ்வொரு கிராமசேவை அலுவலரிடமும் உரிய கிராமசேவை அலுவலருக்குரிய வாக்காளர் இடாப்பு இருக்கும். அதிலுள்ள பெயர்களை ஆதாரமாகக் கொண்டே ஒருவரின் தேவைகளை அவர் நிறைவேற்ற முடியும். எனவே ஒவ்வொருவரும் தமது தனிப்பட்ட தேவைகள் பலவற்றை நிறைவேற்றிக் கொள்ள

> **“ ஒவ்வொரு கிராமசேவை அலுவலரிடமும் உரிய கிராமசேவை அலுவலருக்குரிய வாக்காளர் இடாப்பு இருக்கும். அதிலுள்ள பெயர்களை ஆதாரமாகக் கொண்டே ஒருவரின் தேவைகளை அவர் நிறைவேற்ற முடியும். எனவே ஒவ்வொருவரும் தமது தனிப்பட்ட தேவைகள் பலவற்றை நிறைவேற்றிக் கொள்ள வாக்காளர் இடாப்பில் பெயர்களை பதிவு செய்வது மிகவும் அவசியமானது**

வாக்காளர் இடாப்பில் பெயர்களை பதிவு செய்வது மிகவும் அவசியமானது. தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்வது எவராலும் தடுக்க முடியாத அடிப்படை உரிமையாகும்.

வாடகைக் குடியிருப்பாளர்களுக்கும் தாம் தற்போது வசிக்கும் வீட்டில் வாக்காளராகப் பதிவு செய்து கொள்ளும் உரிமையுண்டு.

சில வீட்டு உரிமையாளர்கள் அவ்வாறு தடுப்பது சட்ட விரோதமான செயற்பாடாகும். எனவே வாடகை வீடுகளில் தற்போது குடியிருப்பவர்களும் தவறாது தமது வாக்காளர் உரிமையைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

வாடகை வீட்டில் குடியிருப்பவர்களின் பெயர்களை வாக்காளராகப் பதிய விடாமல் தடுக்கும் வீட்டு உரிமையாளர்களும், அவர்களுக்கு உடந்தையாகச் செயற்படும் கிராமசேவை அலுவலரும் சட்டத்தை மீறும் குற்றவாளிகள் என்றே குறிப்பிடப்பட வேண்டும். கிராமசேவை அலுவலர் தமது பகுதியில் வாழும் ஒவ்வொரு குடியிருப்பாளரது தேவைக்கும் குறுக்கே இருக்கக்கூடாது.

ஒவ்வொரு குடிமகனும் தனக்குரிய, தனது குடும்பம், உற்றார், சுற்றத்தவரது உரிமையைத் தாமே உறுதிப்படுத்திக்கொள்ள செயற்பட வேண்டும். அது தவிர்க்க முடியாத சமூக கட்டமைப்பும் கூட.

அரசியல்வாதிகளாக, அரசியல் கட்சிப் பிரதிநிதிகளாக வலம் வருவோர் வாக்காளர் பட்டியல் பதிவு தொடர்பில இதுவரை எதுவித அக்கறையும் காட்டியதாக வரலாறு இல்லை.

தேர்தல் காலங்களில் வாக்கு அறுவடை செய்ய வீடு வீடாக அலையும் அவர்கள் வாக்காளர் பதிவு விடயத்தில் பொது மக்களை தெளிவு படுத்தி, வாக்காளர் பதிவை மேற்கொள்ள எதுவித முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்ற கசக்கும் உண்மையை மறைக்க முடியாது.

எது எவ்வாறு இருப்பினும் ஒவ்வொரு குடிமகனும் தமது பதிவு கிராமசேவை அலுவலர் அலுவலகத்தில் அல்லது பிராந்திய தேர்தல் அலுவலகத்தில் உள்ள 2020ம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் தமது பெயர்கள் உள்ளடகப்பட்டுள்ளனவா என்பதை கண்டறியவும் அவ்வாறு இடம் பெற்றிருக்காவிட்டால் அவற்றைப் பதிவு செய்து கொள்ளவும் காலம் தாழ்த்தாது உரிய செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

2020 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் மீளாய்வு கொரோனா பெருந்தொற்று காரணமாக சரியான முறையில் மேற்கொள்ளப்படவில்லை என்ற குறையும் கூறப்படுகின்றது. கடந்த ஜனாதிபதி தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் வாக்களித்தோம் அதனால் எமது பெயர்கள் இடம்பெற்றிருக்கும் என்று எவரும் எதிர்பார்க்கக் கூடாது.

நிரந்தர வீடுகளில் வசிப்பவர்களை மட்டுமே வாக்காளர் பட்டியலில் பதிவோம் என்பதற்கப்பால் இடம்பெயர்ந்து அகதிகளாக தற்காலிக குடியிருப்புகளில் வாழ்வோரையும் வாக்காளராகப் பதிய வேண்டும். கல்வி, தொழில் போன்ற ஏதுக்களால் பிற இடங்களில் தற்காலிகமாக வசிப்பவர்களும் தமது நிரந்தர முகவரியில் வாக்காளர்களாகப் பதிவு செய்ய வேண்டும்.

வாக்காளராகப் பதிவதன் முக்கியத்துவத்தை ஒவ்வொருவரும் சரியாகப் புரிந்து, விழிப்படைந்து காலம் தாழ்த்தாது தம்மை 2021 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலில் அதாவது தேர்தல் இடாப்பில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**கட்டுரையாளர்:**
**ஓய்வு பெற்ற கைத்தொழில் நீதிமன்றப் பதிவாளர்**



## கொங்கு நாட்டின் வரலாறு என்ன?

# தமிழ் நாட்டில் இருந்து பிரிவது சாத்தியமா?

எம்.மணிகண்டன்

அண்மையில் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அமைச்சரவையின் விரிவாக்கத்தின் போது புதிதாக அமைச்சராக நியமிக்கப்பட்ட பாரதிய ஜனதா கட்சியின் எல். முருகன், தனது சுயவிவரத்தில் தம்முடைய வசிப்பிடமாக 'கொங்கு நாடு' எனக் குறிப்பிட்டிருந்தார். அது தமிழ் நாட்டு அரசியலில் தொடர்ச்சியான சர்ச்சைக்கு வித்திட்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் மேற்கு மாவட்டங்களான கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர், கரூர், நாமக்கல், நீலகிரி ஆகியவையும் திண்டுக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் சில பகுதிகளையும் கொங்கு மண்டலம் என்று கூறுவது சம கால அரசியலில் வழக்கமாக இருந்து வருகிறது.

அண்மையில் நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலில் இந்த மண்டலம் தமிழ்நாட்டின் மற்ற மாநிலங்களின் முடிவுகளைப் பிரதிபலிக்கவில்லை. மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் திமுக கூட்டணி பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்ற நிலையில், மேற்கு மண்டலத்தில் மட்டும் பின்னடைவைச் சந்தித்தது.

இந்த மாவட்டங்களில் மொத்தமாக 68 சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. இவற்றில் 44 தொகுதிகளை அ.தி.மு.க. கூட்டணியும், 24 தொகுதிகளை தி.மு.க. கூட்டணியும் கைப்பற்றின. கோவை மாவட்டத்தில் ஒரு தொகுதி கூட தி.மு.கவுக்கு கிடைக்கவில்லை. மாநிலம் முழுவதும் நான்கு இடங்களில் வென்ற பாரதிய ஜனதாவுக்கு இங்கிருந்து இரண்டு எம்.எல்.ஏக்கள் கிடைத்தார்கள்.

இப்படியொரு தேர்தல் முடிவு வந்தது முதலே மேற்கு மண்டலத்தை கேலி செய்தும், பெருமையாகவும் அரசியல் ரீதியான மீம்கள் வெளியிடப்பட்ட. ஒரு கட்டத்தில் கோவை சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு எதிராக #gobackstalin என்ற ஹேஷ்டேக் பரவும் அளவுக்கு நிலைமை முற்றியது.

இந்தச் சூழலில்தான் அமைச்சரின் சுயவிவரத்தில் குறிப்பிடப்பட்ட கொங்கு நாடு என்ற சொல்லாடல் சர்ச்சையாக வெடித்தது. பலர் அது தொடர்பாக சமூக ஊடகங்களில் விவாதிக்கத் தொடங்கினார்கள்.

பாரதிய ஜனதா கட்சியின் தேசிய மகளிரணித் தலைவரும் சட்ட மன்ற உறுப்பினருமான வானதி சீனிவாசன் கொங்கு நாடு பற்றிய இலக்கியக் குறிப்புகளை எடுத்து தமது ஃபேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டார். கொங்கு நாட்டை தனியாகப் பிரிக்கத் திட்டம் இருப்பதாக நாளிதழ் புகைப்படமும் அதில் இடம் பெற்றிருந்தது. அது சர்ச்சை மேலும் தீவிரமாக்கியது.

கொங்கு நாட்டை தமிழ்நாட்டில் இருந்து பிரிப்பது என்ற கருத்தை தி.மு.கவும் அதன் தோழமைக் கட்சிகளும் கடுமையாக எதிர்த்தன. பாஜகவின் தோழமைக் கட்சியான அ.தி.மு.கவும் கொங்கு நாடு பிரிப்பு கோரிக்கையை ஏற்கவில்லை.

கொங்கு நாடு தொடர்பான சர்ச்சை தொடர்பாக பேட்டியளித்திருந்த நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் "கொங்கு நாட்டை தமிழ்நாட்டில் இருந்து பிரிக்க நினைத்தால், இந்தியாவையும் இரண்டாகப் பிரிக்குமாறு கோரிக்கை வைப்பேன்" என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில் செய்தியாளர்களை சந்தித்த பா.ஜ.க. செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ். பிரசாத், கொங்கு நாடு என்பது பா.ஜ.கவின் கருத்து இல்லை என்று விளக்கம் அளித்தார். தமிழகத்தை இரண்டாக பிரிப்பது பா.ஜ.கவின் நிலைப்பாடு அல்ல என்றும், வளமான தமிழகம், வலிமையான பாரதம் என்பதே பா.ஜ.கவின் லட்சியம் என அவர் கூறினார். தமிழ்நாட்டின் பா.ஜ.க. மாநில தலைவர் கொங்கு நாடு குறித்து அதிகாரபூர்வ கருத்து எதையும் வெளியிடவில்லை என்றும் அவர் விளக்கமளித்தார்.

**கொங்கு நாடு என்பது என்ன?**

வரலாற்றில் கொங்கு நாடு என்ற ஒன்று இருந்ததா, அப்படி இருந்தால் அதை யார் ஆட்சி செய்தார்கள், அந்த நிலப்பரப்பின் முக்கியத்துவம் என்ன, அவற்றுக்கெல்லாம் ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றனவா என்பன போன்ற கேள்விகளோடு தொல்லியல் துறையின் ஓய்வு




பெற்ற கல்வெட்டு ஆய்வாளர் இரா.ஜெகதீசனிடம் பேசினோம்

"கொங்கு என்பதற்கு பல்வேறு பெயர்க் காரணங்கள் கூறப்படுகின்றன. தேன், மாம்பழம் ஆகியவற்றின் பொருள் படும்படியாக கொண்டு கொங்கு என்ற பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் அவை ஏற்றுக் கொள்ளக்கூடியவையாக இல்லை. ஆதாரங்களும் கிடையாது. என்னுடைய ஆராய்ச்சியின்படி கொங்கு என்றால் கிழக்கு என்று பொருள்படும். மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கே உள்ள பகுதியை குடகு நாடு என்பார்கள். குடகு என்றால் மேற்கு. மேற்குத் தொடர்ச்சி மலைக்கு கிழக்குப் பகுதியில் வசித்தவர்கள் கொங்கர்கள் என்று அழைக்கப்பட்டனர். இன்றும் நீலகிரி மலையில் வசிக்கும் பழங்குடியினர் கிழக்கு திசையைக் குறிப்பிடுவதற்காகப் கொங்கு என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். வடகிழக்குப் பருவமழையை கொங்கன் மழை என்கிறார்கள். இந்தச் சொல் சங்க இலக்கியங்களிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது"

"ரோமானியர்களுடன் கொங்குப் பகுதி அதிக வணிகத் தொடர்பு கொண்டதாக இருந்தது. தமிழ்நாட்டில் இதுவரை கிடைத்திருக்கும் ரோம நாணயங்களில் 90 சதவிகிதம் அளவுக்கு கொங்கு பகுதிகளில் கிடைத்திருக்கின்றன. கொங்கு பகுதி கரிசல் மண் கொண்ட பூமி என்பதால் பருத்தி, விஜயநகர ஆட்சி நடந்த காலத்தில் பருத்தி விவசாயம் வளர்ச்சியடைந்தது. அதுவே பிற்காலத்தில் நெசவுத் தொழில் வளர்ச்சியடைக் காரணமாக அமைந்தது."

"வரலாற்றின் எந்தவொரு காலகட்டத்திலும் கொங்குநாடு என்ற நிலப்பரப்பு தனி நாடாகவோ, தனி ஆட்சிக்குட்ட பகுதியாகவோ, ஒரே அரசரின் கட்டுப்பாட்டிலோ இருந்ததில்லை. இந்தப் பகுதிக்கு தலைநகரம் என்று எதுவும் இருந்திருக்கவில்லை. இப்போது கொங்கு பிராந்தியங்களாகக் கூறப்படும் தருமபுரி, கிருஷ்ணகிரி, நீலகிரி போன்றவற்றை கொங்கு பகுதிகள் என்பதற்கு ஆதாரம் ஏதுமில்லை. தெற்கே பழனி மலை தொடங்கி, வடக்கே சேலம் ஆத்தூர் வரை தான் கொங்குநாடு என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன" என்கிறார் ஜெகதீசன்.

**அரசியல் முக்கியத்துவம் என்ன?**

கொங்கு நாடு பிரிப்பு என்பது போகிறபோக்கில் அக்கறையின்றிச் கூறப்பட்டிருக்கும் கருத்து என்று பிபிசி தமிழிடம் தெரிவித்தார் "தி இந்து" குழுமத்தின் தலைவரும் மூத்த பத்திரிகையாளருமான என் ராம்.

"கொங்கு நாடு பற்றிய கோரிக்கையே அர்த்தமற்றது, இதை அடுத்த கட்டத்துக்கு முன்னெடுத்துச் செல்லவே முடியாது என்பது அனைவருக்கும் தெரியும் இதுபற்றிய பேச்சுகள் வீண் வேலை. பாரதிய ஜனதா கட்சி இதன் மூலம் தங்களுக்கு ஏதேனும் ஆதாயம் கிடைக்குமா என்று பார்க்கிறது. தமிழகம் மதச்சார்பற்ற தன்மையில் இருப்பதால் பாரதிய ஜனதா கட்சியால் பெரிதாக எதையும் சாதிக்க முடியவில்லை. கொங்கு நாடு பற்றிய பேச்சுகளும் பலன் கொடுக்காது. அதற்கு அரசியல் ரீதியாக எந்தத் தாக்கமும் ஏற்படவில்லை. இனியும் ஏற்படப் போவதில்லை. மக்களின் திரளான கோரிக்கைகள் இல்லாமல் மாநிலங்களை பிரித்துவிட முடியாது.

தமிழ்நாட்டில் புதிதாக அமைந்திருக்கும் திமுக அரசு, 'ஒன்றியம்' என்ற சொல்லைப் பயன்படுத்துவதற்கு எதிர்வினையாக கொங்குநாடு பற்றிய பேச்சு அமைந்திருக்கிறது என்ற கருத்தையும் என்.ராம் மறுத்தார்.

"ஒன்றியம் என்பது அரசியல் சட்டத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்திய யூனியன் என்பதைத் தமிழாக்கினால் இந்திய ஒன்றியம்தான். அதனால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகக் கருதி வேறொன்றைச் செய்வது என்பது பொருளற்றது. குறுக்கு வழியில் மாநில மக்களின் விருப்பத்துக்கு மாறாக, மாநில அரசுகளின் அனுமதியின்றி, மாநிலங்களைப் பிரிக்கமுடியும். என்றாலும் தமிழ்நாட்டில் அது சாத்தியமில்லை" என்றார் என்.ராம்.

> **"வரலாற்றின் எந்தவொரு காலகட்டத்திலும் கொங்குநாடு என்ற நிலப்பரப்பு தனி நாடாகவோ, தனி ஆட்சிக்குட்ட பகுதியாகவோ, ஒரே அரசரின் கட்டுப்பாட்டிலோ இருந்ததில்லை. இந்தப் பகுதிக்கு தலைநகரம் என்று எதுவும் இருந்திருக்கவில்லை.**

இது தொடர்பான சட்ட நடைமுறை குறித்து பி.பி.சி. தமிழிடம் பேசிய சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி வள்ளி நாயகம், மத்திய அரசு தன்னிச்சையாக சில முடிவுகளை எடுக்க முடியும் என்று தெரிவித்தார்.

"மத்திய அரசு நினைத்தால் பாராளுமன்றத்தில் ஒப்புதல் பெற்று புதிய மாநிலங்களை உருவாக்கவும், யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்கவும் முடியும். ஆனால், இப்போதைய சூழலில் மத்திய அரசு தமிழகத்தில் அப்படியொரு நிலைப்பாட்டை எடுப்பதற்கான எந்தவிதமான சாத்தியக்கூறும் இல்லை" என்றார் வள்ளி நாயகம்.

கொங்கு நாடு கோரிக்கை 1989ஆம் ஆண்டிலேயே கோவை செழியன் தலைமையில் தனிமாநிலக் கோரிக்கை வைக்கப்பட்டதாகவும் அதில் தாம் பங்கேற்றதாகவும் கூறுகிறார் பொங்கலூர் மணிகண்டன். இவர் கொங்கு நாடு மேற்கு தமிழகம் அமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்.

"கொங்குநாட்டைத் தனியாகப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை வைத்த அரசியல் பிரமுகர்களை இதற்கு முன் தி.மு.க. ஆதரித்திருக்கிறது அந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்ட பல மாநாடுகளில் தி.மு.க. தலைவர்கள் பங்கேற்றிருக்கிறார்கள். கொங்கு நாடு பகுதியின் ஆதரவின்றியே ஒருவர் தமிழ்நாட்டின் முதல்வராக முடியும் என்னும்போது, அந்தப் பகுதி குறித்து எப்படி அவருக்கு அக்கறை வரும். அதனால் நிர்வாக வசதிக்காக கொங்கு நாட்டை தனியாகப் பிரிக்க வேண்டும்" என்றார் பொங்கலூர் மணிகண்டன்.

ஆனால், தி.மு.க.மாநில சுற்றுச் சூழல் அணியின் செயலாளர் கார்த்திகேய சிவசேனாதிபதி இதை ஏற்கவில்லை.

"கொங்கு பிராந்தியத்தில் சில பிரச்னைகள் இருக்கின்றன என்றால் அதற்காக தனியாகப் பிரிப்பது என்பது தீர்வாகாது. மெட்ரோ ரயில் போன்ற திட்டங்களைக் கொண்டு வரலாம். கூடுதல் நிதியை ஒதுக்கலாம். தேவைப்பட்டால் வளர்ச்சி ஆணையம் ஒன்றை உருவாக்கி பிரச்னைகளுக்குத் தீர்வு காணலாம். ஆனால், கொங்கு நாட்டை தனியாகப் பிரிக்கக் கூடாது. அதுபற்றிய பேச்சு நாட்டின் ஒற்றுமையில் காயத்தை ஏற்படுத்திவிடும்" என்று பி.பி.சி. தமிழிடம் தெரிவித்தார் கார்த்திகேய சிவசேனாதிபதி. இவர் கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்டவர்.

- பிபிசி தமிழ்.

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் - 45 நிமிடம்

**01)** **பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

கண் சிமிட்டி மலரும் கமல மலர்களும் இதர மலர்களும் “ தாயைக் கண்ட மழலையின் புன்முறுவல் ” போல இதழ் விரித்து மலர்கின்றன. மலர்களின் வாசம் கண்டு அவைகளைச் சுற்றிச் சுற்றி ரீங்காரமிடும் வண்டினங்கள் ஒரு புறம், வண்ண வண்ண இறக்கைகளால் சிறகடித்துப் பறந்து திரியும் வண்ணத்துப் பூச்சிகள் மறுபுறம். இவை சிறுவர்களைப் போன்று பெரியவர்களையும் பரவசமடையச் செய்கின்றன.

i) இப்பந்தியில் வர்ணிக்கப்படும் காட்சியைக் குறிப்பிடுக.

..........................................................................................

ii) இங்கு வந்துள்ள அடுக்குமொழிச் சொல்லொன்றை எழுதுக.

..........................................................................................

iii) உவமைத் தொடர் ஒன்றை எழுதுக.

..........................................................................................

iv) மணம் என்பதன் ஒத்த சொல்லை எழுதுக. ..........................................

v) ரீங்காரமிடும் என்பதனைப் பிரித்து எழுதுக...........................................

vi) உயர்திணைப் படர்க்கைப் பன்மைப் பெயர்ச் சொல் ஒன்றை எழுதுக.

..........................................................................................

(6 x 1 =6 புள்ளிகள்)

**02)** தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஒன்றை எழுதுக.

ஏரிக்குச் / புள்ளிமான் / குடிப்பதற்காக / சென்றது / தண்ணீர்

..........................................................................................

(1 புள்ளி)

**03)** **கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

1) அந்தப் பாலம் மிகவும் ..............................................( நீலம் / நீளம்) ஆனது.

2) நாங்கள் ஞாயிற்றுக்கிழமை கடற்..........................................ச்(கறைக்கு/கரைக்கு) சென்றோம்.

(2 x 1 =2 புள்ளிகள்)

**04)** **கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.**

1) அந்தப் பாறையில் குரங்கு மான் சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் கூட செதுக்கப்பட்டுள்ளன.

2) ஐயா பேருந்து நின்று விட்டதே.

(2 x 1 =2 புள்ளிகள்)

**05)** **பின்வரும் பன்மை வாக்கியத்தை ஒருமை வாக்கியமாக மாற்றி எழுதுக.**

1. யானைகள் ஆடி அசைந்து வந்தன.

..........................................................................................

(1 புள்ளி)

**06)** **பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்து எழுதுக.**

1) கேட்காத கடனும் ..........................................

2) அடர விதைத்து சிதறப்..........................................

(2 x 1 =2 புள்ளிகள்)

**07)** **தொடர் மொழிக்குரிய ஒரு மொழிச் சொல்லை எழுதுக.**

i) அரசர்களுக்கெல்லாம் அரசன் ..........................................

(1 புள்ளி)

**08)** **பின்வரும் பாடலைப் பூர்த்தி செய்க.**

நல்லார் ...............................ச் செய்த உபகாரம்

கல்மேல் ...............................போல் காணுமே

(2 புள்ளிகள்)

**09)** **பின்வரும் சுருக்கக் குறியீட்டின் விரிவாக்கத்தினை எழுதுக.**

i) த. பெ. இ ..........................................

ii) இ. ஒ. கூ ..........................................

(2 x 1 =2 புள்ளிகள்)

**10)** **பின்வரும் உவமைத் தொடரின் கருத்தினை எழுதுக.**

i) இலை மறை காய் போல .......................................... (1 புள்ளி)

**11)** **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் “ ✓ ” எனவும் பிழையாயின் “ ✗ ” எனவும் அடைப்புக் குறிக்குள் இடுக.**

i) பறவைக் கூட்டம் பறந்து சென்றது. ( )

ii) ஒவ்வொரு புத்தகங்களும் நல்லது. ( )

iii) தாலாட்டுப் பாடல்கள் இனிமையானது. ( )

iv) எனது பூந்தோட்டத்தில் அழகான பூக்கள் மலர்ந்துள்ளன. ( )

(4 x 1 =4 புள்ளிகள்)

**12)** **அன்று தொலைநோக்குப் பார்வையுடன் அசோக சக்கரவர்த்தி வீதியோரங்களில் மரக்கன்றுகளை நட்டார். “ மரங்களைப் பாதுகாப்போம் ” எனும் தலைப்பின் கீழ் எழுவாய், பயனிலை கருத்துப்புலப்பட மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்)**


i) ..........................................................................................

ii) ..........................................................................................


iii) ..........................................................................................

(6 புள்ளிகள்)

**13)** **படங்களுக்குரிய ஆங்கிலச் சொல்லை எழுதுக.**



i) ...............................



ii) ...............................

iii) பின்வரும் வாக்கியத்தை ஒழுங்குபடுத்தி எழுதுக.

(i) is / my / This / father ..........................................

(ii) That / my / is / car ..........................................

iv) ஆங்கில வாக்கியத்துக்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக.

(i) How old are you? ..........................................

(ii) Those are my pens .......................................... (6 x 1 =6 புள்ளிகள்)

## காத்தான்குடியில் ஹெரோயினுடன் மூவர் சிக்கினர்!

மட்டக்களப்பு, ஜூலை 16

மட்டக்களப்பு மாவட்டம், காத்தான்குடி பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் 3 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் என்று காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த மூவரும் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று காத்தான்குடிப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (இ)

## அரச அராஜகங்களை கண்டித்து
# நான்காவது நாளாகவும் தொடர்ந்தது ஆசிரியர் தொழிற்சங்க போராட்டம்

கொழும்பு, ஜூலை 16

**இணைய வழி கற்பித்தல் நடவடிக்கைகளில் இருந்து விலகி ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களால் முன்னெடுக்கப்படும் தெழிற்சங்க நடவடிக்கை நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்தது.**

கடந்த 12ஆம் திகதி தொழிற்சங்க நடவடிக்கையில் பங்கேற்றிருந்த தமது உறுப்பினர்களுக்கு நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்ட நிலையிலும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப்ஸ்டாலின் உள்ளிட்ட சிலர் தனிமைப்படுத்தலுக்காக அழைத்துச் செல்லப்பட்டமை உள்ளிட்ட பலவிடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

24 ஆண்டுகளாகக் காணப்படும் அதிபர், ஆசிரியர்களுக்காகச் சம்பளப் பிரச்னை குறித்து அனைத்து அரசுகளுக்கும் தெரியப்படுத்தியதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும், தமது பிரச்சினைக்கு எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்

மேலும், காலம் தாழ்த்தாது, தமது பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்குப் பேச்சுகளை முன்னெடுக்குமாறும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் வலியுறுத்தியுள்ளார்.

45 இலட்சம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளிலிருந்து ஆசிரியர்கள் விலகியுள்ளமை தொடர்பில் அரசு இதுவரை எவ்வித பதிலும் வழங்கவில்லை என்று கல்வி தொழிற்சங்கத்தின் தலைவர் உலப்பனே சுமங்கல தேரர் கூறியுள்ளார்.

இதனால் இந்தத் தொழிற்சங்கப் போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## கொரோனா தடை சட்டத்தை மீறிய 50 ஆயிரம் பேர் இதுவரை கைது!

கொழும்பு, ஜூலை 16

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 190 பேர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண நேற்று தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் முதல் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை, 50 ஆயிரத்து 27 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில் சுமார் 43 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.



எஞ்சிய சுமார் 7 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டில், குற்றவாளியாகும் நபர் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபாய் அபராதமும், 6 மாத சிறைத் தண்டனையும் நீதிமன்றத்தால் விதிக்க முடியும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார். (இ)

# அரசியல் தேவைக்காகவே ஆசிரியர்கள் போராட்டத்தில்
## சுகாதார அமைச்சர் பவித்ரா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 16

அரசியல் கட்சிகளின் தேவைக்கேற்ப, அவர்களின் வழிகாட்டலுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் குறுகிய நோக்கம்கொண்ட தொழிற்சங்க நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும் என்று ஆசிரியர் சங்கங்களை வலியுறுத்தியுள்ளார் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

“தனிமைப்படுத்தல் சட்டம் மற்றும் சுகாதார நடைமுறைகளை மீறும் நபர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எனவே, தனிமைப்படுத்தல் எவர் மீறினாலும் தராதரம் பாராது அவர்களுக்கு எதிராகப் பொலிஸார் சட்டத்தைச் செயற்படுத்துவார்கள்.



ஆசிரியர் சங்கத்தின் பிரதானியே வீதியில் இறங்கி தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறும் போது, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு மாணவர்களுக்கு எவ்வாறு பணிப்புரை விடுப்பது?

அரசியல் கட்சிகளின் தேவைக்காக, அக்கட்சிகளின் வழிகாட்டலுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் குறுகிய நோக்கம் கொண்ட குறித்த தொழிற்சங்கப் போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்டுக்கொள்கின்றோம். கொரோனாவைக் கட்டுக்குள் கொண்டுவரும் வரை நிறுத்துமாறு கோருகின்றோம்” - என்றார்.

ஜோன்கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலத்தை மீளப்பெறுமாறு வலியுறுத்தியும், இலவசக் கல்வியைப் பாதுகாக்கும் நோக்கிலும் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் பங்கேற்ற இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுப் பலவந்த தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.


இதனைக் கண்டித்தும், அவர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தியும் இணைய வழி கற்பித்தல் நடவடிக்கையில் இருந்து ஆசிரியர்கள் விலகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)


# இரட்டை வேடமிட்டு அரசை குழப்பியடிக்க சிலர் சூழ்ச்சி
## ‘மொட்டு’வின் சிரேஷ்ட உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 16

“எமது அரசில் எந்தவித குழப்பங் களும் இல்லை. ஆனால், இரட்டை வேடமிட்டு அரசைக் குழப்பியடிக்க எம்முடன் ஒட்டிக் கொண்டுள்ள சிலர் முயற்சிக்கின்றனர்.”

- இவ்வாறு குற்றச்சாட்டை முன் வைத்துள்ளது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன.





இது தொடர்பில் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்ததாவது:-

“குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவே அரசில் குழப்பங்களை உருவாக்குகின்றார்.

ராஜபக்ஷவினரின் அரசாங் கத்தை அமைப்பதில் ஆரம்பத்தில் கைகொடுத்த நபர்களுக்கு அரசில் அமைச்சுப் பதவிகள் கொடுக்கப்பட் டுள்ளன. எனவே எவரையும் நிராகரிக்க வில்லை.

ஆனால், அரசில் இருந்து கொண்டு ராஜபக்சவுடன் முரண்படும் நபர்களுக்கு எச்சரிக்கை விடுக்க வேண்டியுள்ளது. அரசாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரை அவர்களுக்கு அரசில் வழங்க வேண்டிய இடத்தை வழங்கியுள்ளோம்.

தயாசிறி ஜயசேகரவுக்கு அவரது இராஜாங்க அமைச்சுப் பதவியில் திருப்தி இல்லை” - என்றார்.

இது குறித்து அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன கூறுகையில்,

“அரசுக்குள் நெருக்கடியை ஏற்படுத்த யாரும் செயற்படவில்லை. அரசுக்குள் பல்வேறு கட்சியினர் ஒன்றிணையும் போது பல முரண்பாடுகள் ஏற்படும். அதனைப் பெரும் சர்ச்சையாக நாம் கருதவில்லை.

ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர மற்றும் சிலர் இவ்வாறு குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

ஜனவரி 8ஆம் திகதி வரைக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் இருந்தவர்கள் அடுத்த நாள் மைத்திரிபால சிறிசேனவுடன் ஒன்றிணைந்தமை நினைவில் உள்ளது.

இவர்கள் இன்றும் அரசுக்குள் இரட்டை வேடமிட்டு அரசைக் குழப்பியடிக்க நடவடிக்கை எடுக்கின்றனர்”- என்றார். (இ)



## இரணைப்பாலையில் 250 கிலோ வெடிகுண்டு

முல்லைத்தீவு, ஜூலை 16

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ்பிரிவுக்குட்பட்ட இரணைப்பாலை பகுதியில் வெடிக்காத நிலையில் நிலத்தில் புதையுண்ட பாரிய வெடிகுண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

போரின்போது வீசப்பட்ட குண்டே இவ்வாறு வெடிக்காத நிலையில் காணப்பட்டுள்ளது.

சுமார் 250 கிலோவுக்கும் அதிக நிறைகொண்ட குறித்த குண்டு அவதானிக்கப்பட்ட நிலையில் குறித்த குண்டை அகற்றுவது தொடர் பில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் சட்ட நடவடிக்கையை மேற்கொண்டனர். (இ)

ஈழநாடு



### உலகில் கொரோனா மீண்டும் உச்சம்

# இயல்பு வாழ்வு திரும்புவதற்கான நம்பிக்கையை இழக்க செய்துள்ளது

### உலக சுகாதார ஸ்தாபனம்

- மரண எண்ணிக்கையும் அதிகரிப்பு
- 111 நாடுகளில் டெல்டா திரிபு பரவல்
- கட்டுப்பாடுகள் மீண்டும் அவசியம்

ஜெனிவா, ஜூலை 16

கொரோனா வைரஸ் தொற்று 10 வீதத்தாலும் அதனால் ஏற்படும் மரண எண்ணிக்கை 3 வீதத்தாலும் கடந்த வாரத்தை விட உலகம் முழுவதும் அதிகரித்துள்ளது.

இது மற்றொரு சுற்று கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய நிலைக்கு பல நாடுகளைத் தள்ளியுள்ளதுடன், இயல்பு வாழ்வுக்குத் திரும்புவதற்கான நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளது என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

கடந்த 9 வாரங்களாக உலகளவில் குறைந்துவந்த கொரோனா மரணங்கள் கடந்த வாரம் முதல் மீண்டும் அதிகரித்து வருகின்றது என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் உலகம் முழுவதும் 55,000 கொரோனா மரணங்கள் பதிவாகின. இது, முந்தைய வாரத்தில் இருந்து 3 வீதத்தால் அதிகரித்துள்ளது. இதேபோன்று, தொற்று நோயாளர் தொகையும் கடந்த வாரம் முதல் 10 வீதத்தால் உயர்ந்துள்ளது.

கடந்த வாரத்தில் உலகெங்கும் சுமார் 30 இலட்சம் புதிய தொற்று நோயாளர்கள் பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டனர். பிரேஸில், இந்தியா, இந்தோனேசியா மற்றும் பிரிட்டனில் அதிக எண்ணிக்கையிலான தொற்று நோயாளர்கள் கடந்த வாரம் பதிவாகினர் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

தடுப்பூசி வழங்கலில் ஏற்பட்ட தாமதங்கள், முகக்கவசம் உள்ளிட்ட சுகாதார பாது காப்பு விதிகளை தளர்த்துதல் மற்றும் ஆபத்தான டெல்டா திரிபு பரவல் ஆகியன தொற்று நோய் அதிகரிப்புக்கான காரணிகளாக உள்ளன.

வேகமாகப் பரவும் டெல்டா திரிவு தற்போது 111 நாடுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இது எதிர்வரும் மாதங்களில் உலகம் முழுவதும் மேலும் ஆதிக்கம் செலுத்தும் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது. (ஐ)



# தாய்வானில் 2 மணி நேரத்தில் 22 தடவைகள் நிலநடுக்கம்!

தாய்வானில் நேற்று 2 மணித்தியாலங்களில் 22 முறை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

தாய்வானின் கிழக்கு கடற்கரை நகரமான ஹூலியன் கவுண்டி நகரத்திலேயே இந்த நில நடுக்கம் ஏற்பட்டது.

நேற்று காலை 6:52 மணிக்கு தொடங்கிய நிலநடுக்கம் நகரின் பல்வேறு பகுதிகளில் அடுத்தடுத்து ஏற்பட்டது. இதனால் மக்கள் பீதியடைந்தனர். ரிக்டர் அளவில் 5.2 ஆகப் பதிவான முதல் நிலநடுக்கம், இதர பகுதிகளில் 3 முதல் 5 ஆகப் பதிவானது.

2 மணி நேரத்தில் தொடர்ச்சியாக 22 நிலநடுக்கங்கள் ஏற்பட்டதால் மக்கள் தங்களது வீடுகளை விட்டு வெளியேறினர். இந்த நிலநடுக்கங்களால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த முழுமையான விவரங்கள் வெளியாகவில்லை. (ஐ)



# கனடாவில் அடங்காது பரவுகிறது காட்டுத் தீ!

றொறன்றோ, ஜூலை 16

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் நூற்றுக்கணக்கான இடங்களில் காட்டுத்தீ கட்டுப்பாட்டை மீறி பரவி வருகிறது.

தீப்பரவல் அதிகரித்து வரும் நிலையில் மாகாணத்தில் மத்திய மற்றும் கிழக்கு பெரும் பகுதிகளில் வானில் பெரும் புகை எழுந்து வருகிறது. இதனால் இந்தப் பகுதிகள் விசேட காலநிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் லிட்டன் நகரம் தீ விபத்தால் கிட்டத்தட்ட முழுமையாக அழிக்கப்பட்ட பின்னர் மாகாணத்தின் பல பகுதிகள் தொடர்ந்தும் எச்சரிக்கையின் கீழ் உள்ளன. ப்ரேசர் கன்யோன் உட்பட மாகாணத்தின் பல பகுதிகளும் வெப்ப அபாய எச்சரிக்கையின் கீழ் உள்ளன.

காட்டுத் தீ ஆபத்துள்ள பகுதிகளில் மக்கள் எந்நேரமும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காட்டுத் தீயை கட்டுப்படுத்த கனடிய மத்திய அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. (ஐ)

# ஆப்கான் மொழிபெயர்ப்பாளர்க்கு தலிபான்களால் உயிர் அச்சுறுத்தல்!

### அமெரிக்கா தஞ்சமளிக்க முடிவு

வாஷிங்டன், ஜூலை 16

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படைகளுக்கு மொழிபெயர்ப்பாளர்களாக செயல்பட்டவர்களுக்கு தலிபான்களால் ஆபத்துள்ளது. இதனால் அவர்களை மீட்டு அமெரிக்காவுக்கு அனுப்பிவைக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த மாத இறுதி வாரத்தில் இதற்கான மீட்பு நடவடிக்கை தொடங்கப்படும் என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் விலக்கிக் கொள்ளப்பட்ட நிலையில் தலிபான்கள் தங்களின் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளனர். நாட்டின் பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றி அவர்கள் வேகமாக முன்னேறி வருகின்றனர்.

இந்த நிலையில் முன்னேறி வரும் தலிபான்களால் அமெரிக்கப் படைகளுக்கு மொழிபெயர்ப்பாளர்களாகக் கடமையாற்றியவர்கள் கொல்லப்படலாம் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. இதனையடுத்தே அவர்களை மீட்டு அமெரிக்காவுக்கு அனுப்பிவைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

அவர்களுக்காக வீஸா விண்ணப்பங்கள் அனுமதிக்கப்படும் வரை சுமார் 2,500 பேர் அமெரிக்காவிலோ அல்லது வேறு நாட்டிலோ உள்ள அமெரிக்காவின் படைத்தளத்தில் தங்கவைக்கப்படுவார்கள் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# ஜேர்மனியில் தொடர் மழை! 6 பேர் மரணம் 30 பேர் மாயம்

பெர்லின், ஜூலை 16

ஜேர்மனியில் நேற்றுமுன்தினம் இரவு முதல் தொடர்ந்து பெய்யும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் வீடுகள் இடிந்து வீழ்ந்து 6 பேர் உயிரிழந்தனர். 30 பேர் வரை காணாமல் போயுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

ஜேர்மனியின் மேற்கு கரை ரைன்லாண்ட்-பலாட்டினேட் (Rhineland-Palatinate) மாகாணத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தொடர் மழையால் வீடுகளில் இருந்து வெளியேற முடியாது பலர் வீடுகளின் கூரைகளில் தங்கியுள்ளனர் என்று கூறப்படுகின்றது. வெள்ளம் மற்றும் இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களைத் தேடி மீட்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருவதாக கோப்லென்ஸ் பகுதி பொலிஸார் தெரிவித்தனர்.

தீயணைப்பு படையினர் மற்றும் மீட்புப் பணியாளர்கள் தீவிரமாக மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். மீட்புப் பணிகள் இடம்பெற்றுவரும் நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான முழுமையான தகவல்கள் இதன் பின்னரே வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# வத்திக்கான் திரும்பினார் பாப்பரசர் பிரான்சிஸ்

வத்திக்கான், ஜூலை 16

சத்திர சிகிச்சையின் பின்னர் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் நேற்று முன்தினம் புதன்கிழமை வத்திக்கானுக்கு திரும்பினார்.

கத்தோலிக திருச்சபையின் தலைவரான பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் (வயது 84) வயிற்று வலியால் அவதிப்பட்டார். மருத்துவ பரிசோதனையின் பின்னர், கடந்த 4ஆம் திகதி அவருக்கு பெருங்குடலில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

தீவிர மருத்துவ கண்காணிப்பில் இருந்த அவர் நேற்று முன்தினம் தனது இருப்பிடமான வத்திக்கானுக்கு திரும்பினார்.

அவர் வத்திகானுக்கு செல்வதற்கு முன்னர், ரோம் நகரில் உள்ள சாண்டா மரியா மாகியோர் பேராலயத்துக்கு சென்று வழிபாடு நடத்தினார். (ஐ)

# பறவை காய்ச்சல் சீனாவில் பரவல்!

பீஜிங், ஜூலை 16

சிச்சுவான் மாகாணத்தில் எச் 5 என் 6 பறவைக் காய்ச்சலால் மனித நோய்த்தொற்று ஏற்பட்டதை சீனா உறுதிப்படுத்தியுள்ளது என்று அந்நாட்டு அரச ஊடகங்கள் நேற்று வியாழக்கிழமை தெரிவித்தன.

இதன்படி பஜோங் நகரில் பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 55 வயது ஆணொருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஜனவரி மாதம், பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி 6 இலட்சத்து 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பறவைகளிடம் பறவைக் காய்ச்சல் பரவுவதைக் கட்டுப்படுத்தின.

பெப்ரவரியில் ரஷ்ய அதிகாரிகள் எச் 5 என் 8 பறவைக் காய்ச்சல் பறவைகளிலிருந்து மனிதர்களுக்கு முதன்முறையாக பரவியதாக கூறினார். இதன்போது ரஷ்ய கோழி ஆலையில் ஏழு பேர் நோய் வாய்ப்பட்டனர்.

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்: புள்ளியிடல் முறை மாற்றம்!

டுபாய், ஜூலை 16

உலக டெஸ்ட் போட்டிக்கான புள்ளி கணக்கிடும் முறையில் புதிய மாற்றத்தை ஐ.சி.சி. அறிமுகப்படுத்தியுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) சார்பில் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் நடத்தப்படுகிறது. இதன் முதல் சீசனுக்கான (2019-2021) இறுதியாட்டத்தில் இந்தியாவை வீழ்த்திய நியூசிலாந்து அணி முதல் கிண்ணத்தை வென்றது.

ICC WORLD TEST CHAMPIONSHIP

அடுத்த மாதம் தொடங்கும் 2ஆவது சீசன், வரும் 2023 வரை நடக்கவுள்ளது. கடந்த சீசனில் புள்ளி வழங்கும் முறையில் குழப்பம் நிலவியது. இதன்படி ஒரு டெஸ்ட் தொடருக்கு 120 புள்ளி வழங்கப்பட்டது. இதில் 2 போட்டிகள் கொண்ட தொடரில் வெற்றி பெறும் அணிக்கு 60 புள்ளிகளும் (ஒரு போட்டிக்கு), ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் வெற்றி பெறும் அணிக்கு 24 புள்ளிகளும் (ஒரு போட்டிக்கு) வழங்கப்பட்டன. கொரோனா பரவல் காரணமாக போட்டிகள் இரத்தானதால் புள்ளி வழங்கும் முறையில் குழப்பம் ஏற்பட்டது.

இதையடுத்து, 2ஆவது சீசனில் புள்ளி வழங்கும் முறையில் மாற்றம் செய்ய ஐ.சி.சி., முடிவு செய்தது. இதன்படி ஒரு டெஸ்ட் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு 12 புள்ளிக்ள வழங்கப்படும். ஒருவேளை போட்டி சமநிலையில் முடிவடைந்தால், இரு அணிகளுக்கும் தலா 4 புள்ளி கிடைக்கும். தவிர, போட்டி கைவிடப்பட்டால், இரு அணிகளுக்கும் தலா 6 புள்ளியும் வழங்க முடிவு செய்யப்பட்டது. இதனை ஐ.சி.சி., உறுதி செய்துள்ளது. (ஐ)

# விம்பிள்டன் தொடரில் ஆட்டநிர்ணய சதி?

லண்டன், ஜூலை 16

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் ஆட்டநிர்ணய சதி நடந்தது குறித்து ஐ.டி.ஐ.ஏ., விசாரணை நடத்துகிறது.

இங்கிலாந்தின் லண்டனில் சமீபத்தில் விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் நடந்தது. ஆண்கள் ஒற்றையரில் சேர்பியாவின் ஜொகோவிச், பெண்கள் ஒற்றையரில் அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி சம்பியன் கோப்பை வென்றனர்.

இதனிடையே இந்தத் தொடரின் இரு போட்டிகளில் ஆட்டநிர்ணய சதி நடந்தனவென செய்திகள் வெளியாகின. இதுகுறித்து சர்வதேச ரென்னிஸ் சங்கத்தின் (ஐ.டி.ஐ.ஏ.,) செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில்,

விம்பிள்டன் ரென்னிஸ் நடந்த போது, சூதாட்ட உலகத்தின் தரப்பில் இருந்து 'சில போட்டிகள் முறையற்ற முறையில் நடப்பதாக,' எங்களிடம் இரு முறை எச்சரிக்கை செய்தனர். அதேநேரம் ஆட்ட நிர்ணய சதி நடந்ததற்கான ஆதாரத்தை அவர்கள் தரவில்லை. இதுகுறித்து ஐ.டி.ஐ.ஏ., இரகசியமான முறையில், முழு அளவில் விசாரித்து வருகிறது. இப்போதைக்கு வேறு எதுவும் தகவல் தெரிவிக்க முடியாது - என்றார். (ஐ)

# இறுதி ஓவரில் ஆஸி.யிடம் பணிந்தது மே.இ.தீவுகள்!




குரோஸ் ஐலட், ஜூலை 16

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான 4ஆவது இருபது - 20 ஆட்டத்தில் மிற்செல் ஸ்ரார்க்கின் அசத்தலான கடைசி ஓவரால் அவுஸ்திரேலிய அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத்தீவுகள், அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 4ஆவது இருபது -20 போட்டி இலங்கை நேரப்பட்டி நேற்று வியாழக்கிழமை அதிகாலை தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் அரோன் பின்ஞ் முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார்.

ஒஷேன் தோமஸ் வீசிய 2ஆவது ஓவரிலேயே மத்தியூ வேட் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆனால், தோமஸ் வீசிய 4ஆவது ஓவரில் மிற்செல் மார்ஷ் தலா 2 பௌண்டரிகள், 2 சிக்ஸர்கள் விளாச அந்த ஓவரில் 25 ஓட்டங்கள் கிடைத்தன.

அதிரடி ஆட்டத்தை மார்ஷ் கையிலெடுக்க, அணித் தலைவரான பின்ஞ் ஒத்துழைப்பு அளித்தார். இதனால், 'பவர் பிளே' முடிவில் அவுஸ்திரேலிய அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 72 ஓட்டங்களை எடுத்தது.

பிறகு பின்ஞ்சும் அதிரடி காட்ட 10 ஓவர்கள் முடிவில் அவுஸ்திரேலிய அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 112 ஓட்டங்கள் விளாசி பெரிய இலக்கை நிர்ணயிப்பதற்காக நகர்ந்தது.

அரைச்சதம் அடித்த பின்ஞ் 53 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஹேடன் வோல்ஷ் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்த பந்திலேயே அலெக்ஸ் ஹரி ஓட்டம் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். மொய்சஸ் ஹென்றிக்ஸ் மற்றும் அஸ்ரன் ரேர்னர் தலா 6 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். மிற்செல் மார்ஸும் 44 பந்துகளில் 75 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

எனினும், டேன் கிறிஸ்ரியன் மட்டும் கடைசி கட்டத்தில் அதிரடி காட்டி நம்பிக்கையளித்தார். இதனால், அவுஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 189 ஓட்டங்களைக் குவித்தது.

இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த கிறிஸ்ரியன் 14 பந்துகளில் 22 ஓட்டங்களை எடுத்தார்.

190 ஓட்டங்கள் என்ற கடினமான இலக்குடன் மேற்கிந்தியத்தீவுகளின் தொடக்க ஆட்டக்காரர்களாக லெண்டில் சிம்மன்ஸ் மற்றும் எவின் லிவிஸ் களமிறங்கினர்.

முதலிரண்டு ஓவர்களில் சிம்மன்ஸ் மிரட்டலான தொடக்கம் கொடுத்தார். அடுத்த இரண்டு ஓவர்களில் லிவிஸ் அதிரடி காட்ட முதல் 4 ஓவர்களிலேயே மேற்கிந்தியத் தீவுகள் 56 ஓட்டங்களை எட்டியது.

இதனால், 5ஆவது ஓவரிலேயே அடம் ஸாம்பாவை பந்துவீச அழைத்தார் பின்ஞ். இதன் பிரதிபலனாக லிவிஸ் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து அதிரடி காட்டி வந்த சிம்மன்ஸ் 28ஆவது பந்தில் அரைசதம் அடித்தார். ஆனால், கடந்த ஆட்டத்தில் மிரட்டிய கெயில் இம்முறை ஓர் ஓட்டம் மட்டும் எடுத்து சோபிக்கத் தவறினார். இதனால், ஓட்டவேகம் குறைந்தது. பிளெட்சரும் 6 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

கடைசி 7 ஓவர்களில் 83 ஓட்டங்கள் தேவை என்ற இக்கட்டான நிலை ஏற்பட்டது. அணித்தலைவர் நிகோலஸ் பூரணும், சிம்மன்ஸும் சற்று அதிரடி காட்ட கடைசி 5 ஓவர்களில் 58 ஓட்டங்கள் தேவை என்ற நிலை உருவானது.

ஆனால், மிற்செல் மார்ஷ் வீசிய 16ஆவது ஓவரில் பூரண் 16 ஓட்டங்களுடனும், சிம்மன்ஸ் 72 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்த பந்தில் ஆட்டமிழந்தனர். அடுத்த இரண்டு ஓவர்கள் பெரிய ஓவர்களாக மாறாததால் மேற்கிந்தியத்தீவுகளின் வெற்றிக்கு இறுதி இரண்டு ஓவர்களிலும் 36 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

ரைலே மெரெடித் வீசிய 19 ஓவரை சிக்ஸர் அடித்து தொடக்கினார் அந்ரே ரஸல். அதே ஓவரின் 3, 4, 5ஆவது பந்துகளை சிக்ஸருக்கு பறக்கவிட்டார் பேபியன் அலென். ஆனால், அதே ஓவரின் கடைசி பந்தில் அலென் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

எனினும், கடைசி ஓவரில் மேற்கிந்தியத்தீவுகள் வெற்றிக்கு 11 ஓட்டங்கள் தேவை என்ற நிலை இருந்தது. களத்தில் ரஸல் இருந்தார். மிற்செல் ஸ்ரார்க் ஓவரை வீசினார்.

அவர் சிறப்பாக பந்துவீசியதால் ரஸலால் பௌண்ட்ரிக்கு பந்தை விரட்ட முடியவில்லை, ஓட்டம் எடுக்கவும் மறுத்துவிட்டார். முதல் 4 பந்துகளில் ஓட்டம் ஏதும் எடுக்காததால் கடைசி 2 பந்துகளில் 2 சிக்ஸர்கள் தேவை என்ற இக்கட்டான நிலை ஏற்பட்டது.


5ஆவது பந்தில் 2 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க மேற்கிந்தியத் தீவுகளின்வெற்றி வாய்ப்புப் பறிபோனது.

கடைசி பந்தில் ரஸல் பௌண்ட்ரி அடித்தும் பலனளிக்கவில்லை.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 185 ஓட்டங்கள் மட்டுமே எடுத்ததால் அவுஸ்திரேலிய அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் அரைச்சதம் அடித்தும், பந்துவீச்சில் 3 முக்கிய விக்கெட்களையும் வீழ்த்திய மிற்செல் மார்ஷ் ஆட்டநாயகன் விருதை வென்றார்.

5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் 3-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. (ஐ)




# மெஸ்ஸி அடுத்த 5 ஆண்டுகள் பார்ஸிலோனாவில் தொடர்வார்!

பார்ஸிலோனா, ஜூலை 16

பார்ஸிலோனா அணியில் லயோனல் மெஸ்ஸி இன்னும் 5 ஆண்டுகளுக்கு விளையாடுவார் என்று அறிய வருகின்றது.

உலகின் சிறந்த உதைபந்தாட்ட வீரர்களில் ஒருவர் லயோனல் மெஸ்சி. ஆர்ஜென்ரீனாவை சேர்ந்த அவர் ஸ்பெயினில் உள்ள பார்ஸி லோனா கழகத்துக்காக விளையா டுகிறார்.

34 வயதான அவரின் 21 ஆண்டு கால ஒப்பந்தம் அண்மையில - முடிவடைந்தது. இதைத்தொடர்ந்து மெஸ்ஸி எந்த அணிக்கும் சொந்தமில்லை என்றும் தனி வீரர் என்றும் அறிவிக்கப்பட்டது. அவர் நினைத்தால் எந்தக் கழகத்திலும் விளையாடலாம் என்ற நிலை ஏற்பட்டது.

சமீபத்தில் மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜென்ரீனா அணி கோபா அமெரிக்க கிண்ணத்தை 28 ஆண்டுகளுக்கு பிறகு கைப்பற்றியது. கழக அணிகளில் பல்வேறு கிண்ணங்களைப் பெற்று கொடுத்த மெஸ்ஸி முதன் முறையாக தனது நாட்டுக்காக முக்கிய பட்டத்தை கைப்பற்றினார். இதன்மூலம் அவரின் கனவு நனவானது.

இந்தநிலையில் மெஸ்ஸி பார்ஸிலோனா கழகத்தில் தொடர்ந்து விளையாடுகிறார். அவரின் ஒப்பந்தம் மேலும், 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படுகிறது. மெஸ்ஸியுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதை பார்ஸிலோனா கழகம் ஒப்புக் கொண்டுள்ளது.

அந்தக் கழகம் தற்போது கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கி தவிக்கிறது. இதன் காரணமாக மெஸ்ஸிக்கு வழங்கப்படும் ஊதியம் 5 வீதத்தால் குறைத்துள்ளது. இதை மெஸ்ஸி ஏற்றுக் கொண்டார் என்று தெரிய வருகின்றது. ஒப்பந்தம் நீடிப்பு குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும். (ஐ)

# ராஜபக்ஷ அரசை வீட்டுக்கு அனுப்ப அனைவரும் அணிதிரள வேண்டும்

## லால்காந்த கோரிக்கை



**கொழும்பு, ஜூலை 16**

**"ராஜபக்ச குடும்பத்தின் திட்டங்களையே தற்போதைய அமைச்சரவை செயற்படுத்துகின்றது. மாறாக சுயாதீனமாக இயங்கக்கூடிய அமைச்சர் ஒருவர் இந்த நாட்டில் இல்லை. அவர்களால் சுயாதீனமாக அமைச்சரவை பத்திரமொன்றைக்கூட முன்வைக்கமுடியாது. எனவே, ராஜபக்ஷ அரசை வீட்டுக்கு அனுப்ப அனைவரும் அணிதிரள வேண்டும்."**

- இவ்வாறு ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"பஸில் ராஜபக்ஷ அமெரிக்காவில் இருந்திருந்தாலும் அவருக்கும் தெரியப்படுத்திவிட்டே எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. ராஜபக்ஷ குடும்பம் எடுத்த முடிவுதான் இது. பாவம் அமைச்சர் உதய கம்மன்பில, அவர் மீது தற்போது பழிசுமத்தப்பட்டுள்ளது.

வலுசக்தி அமைச்சர் என்ற வகையில் கம்மன்பிலவால் தனியாக எரிபொருட்களின் விலையை அதிகரிக்க முடியுமா? அவ்வாறு சுயாதீனமாக அமைச்சர்கள் செயல்படக்கூடிய சூழ்நிலை இங்கு இருக்கின்றதா? தனது அமைச்சுசார் விடயம் தொடர்பில் அமைச்சர் ஒருவருக்குச் சுயாதீனமாகப் பத்திரமொன்றை முன்வைப்பதற்கான சுதந்திரம் இந்த அமைச்சரவையில் உள்ளதா? அவ்வாறு இல்லை.

ராஜபக்ஷ குடும்பத்தினர் கலந்துரையாடி எடுக்கும் தீர்மானங்களுக்குக் கையொப்பமிட்டு, அதனை நடைமுறைப் படுத்துவதற்கான பத்திரத்தை அமைச்சரவையில் முன்வைக்கும் அதிகாரம் மட்டுமே அமைச்சர்களுக்கு உள்ளது. இந்நிலையில், உதய கம்மன்பிலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளமை தவறு. ஏனெனில் எரிபொருட்களின் விலையை அதிகரிக்கும் முடிவை எடுத்தது ராஜபக்ஷ குடும்பம்.

கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தால் நல்லதே நடக்கும் என்று உத்தரவாதம் வழங்கினர். ஆனால், என்ன நடக்கின்றது? கொரோனாவை இவர்களே உருவாக்கினர். நுவரெலியாவில் வசந்தகால கொண்டாட்டத்துக்கு அனுமதி வழங்கியது யார்? கொரோனா இருந்தால்தான் ஏனைய பிரச்சினைகளை ஆட்சியாளர்களால் மறைக்க முடிகின்றது.

தனது இயலாமையை மூடி மறைக்க மக்களை ஒடுக்குகின்றனர். எனவே, ராஜபக்ஷ அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். அதற்காக அனைவரும் அணிதிரள வேண்டும்" - என்றார். (இ)

# அம்பாறை விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

அம்பாறை, ஜூலை 16.

அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சாய்ந்தமருதைச் சேர்ந்த பிரபல மோட்டார் சைக்கிள் விற்பனையாளர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை அம்பாறை - வளத்தாப்பிட்டி பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான நபர் அம்பாறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர், தொழில் நிமிர்த்தம் அம்பாறைக்கு சென்ற வேளையிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# பலாலியில் இருந்து 67 பேர் வீடுகளுக்கு



யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்ப்பாணம் பலாலி பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் தனிமைப்படுத்தல் மையத்தில் இரு வாரங்களாகத் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 67 பேர் நேற்று தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வீடு திரும்பினர்.

யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் 52 ஆவது தரைப் படைத் தலைமையகம் மற்றும் 521ஆவது காலாட் படைப் பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்ற வசாவிளான் தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்களே வீடு திரும்பினர்.

குறித்த தனிமைப்படுத்தல் மையத்தில் சவுதி அரேபியா, கட்டார், குவைத், சைபிரஸ், ஜோர்தான் ஆகிய நாடுகளிலிருந்து வருகை தந்த 67 பேர் கடந்த இரண்டு வாரங்கள் தனிமைப்படுத்தப்படுத்தலை நிறைவு செய்த பின்னர் தத்தமது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கதிர்காமம், காவத்தை, காலி, மற்றும் அம்பாறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வீடு திரும்பியுள்ளனர். (இ-03)

# நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் சுற்றிவளைப்புக்களில் பலர் மாட்டினர்!

கொழும்பு, ஜூலை 16

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சுற்றிவளைப்புகளில் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.



இதற்கமைவாக அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேவகொட பலபொக்க பிரதேசத்தில், அம்பலாங்கொட பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது 5 கிராம் 550 மில்லிகிராம் ஹெரோய்னுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அம்பலாங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோதமிபுர பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 5 கிராம் 160 கிராம் மில்லிகிராம் ஹெரோய்னுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொரளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

எகொடஉயன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தீவர காரியால தோட்டப் பகுதியில் 4 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோய்னுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மொரட்டுவைப் பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார். ஹெரோய்ன் விற்பனையில் பெற்றுக்கொண்ட 8 ஆயிரத்து 500 ரூபாய் பணத்தையும் அவரிடமிருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேலும், கொழும்பு வடக்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 4 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோய்னுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பேருவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார். (இ)

# நாட்டில் என்றுமில்லாதவாறு மருந்துகளுக்கு தட்டுப்பாடு

## ராஜித எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 16

அண்மைக்காலத்தில் நாட்டின் தனியார்துறை சந்தைகளில்கூட தைரொட்சின், புற்றுநோய் மருந்து உள்ளிட்ட அத்தியாவசியமான மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது போன்றதொரு நெருக்கடி நிலை முன்னெப்போதும் ஏற்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதுமாத்திரமன்றி நல்லாட்சி அரசின் ஆட்சிக்காலத்தில் மருந்துப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படவில்லை என்றும், அவ்வாறு ஏற்படும் பட்சத்தில் உடனடியாக அதற்குரிய தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நல்லாட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் புதியதொரு மென்பொருளின் உதவியுடன் மருந்துப்பொருட்களின் கையிருப்பு தொடர்பான தகவல்கள் உரியவாறு பேணப்பட்டன. அதன் காரணமாக எமது ஆட்சிக் காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மருந்துப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படவில்லை.

அதனையும் மீறி மருந்துப் பொருட்களுக்குப் பற்றாக்குறை ஏற்படும் பட்சத்தில், அந்தப் பிரச்சினை இரு நாட்களுக்குள் நிவர்த்தி செய்யப்படும்" - என்றார். (இ)

# 15 வயது சிறுமி விற்பனை விவகாரம்: அணிவகுப்பில் இருவர் அடையாளம்

## கடும் நிபந்தனைகளுடன் பிணை

கொழும்பு, ஜூலை 16

15 வயதான சிறுமி விற்பனை விவகாரத்தில் அவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட தனியார் கப்பல் நிறுவனத்தின் கப்டனும் உதவி கப்டனும் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பில் குறித்த சிறுமியால் அடையாளம் காட்டப்பட்டுள்ளனர்.

அடையாள அணிவகுப்பை அடுத்து அவர்கள் தொடர்பான விசாரணைகள் முடிவடைந்துள்ளன என்று சிறுவர் மற்றும் மகளிர் பிரிவினர் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர்.

இதையடுத்து, கொழும்பு மேலதிக நீதிவான் லோச்சனி அபேவிக்ரம சந்தேகநபர்களைக் கடும் நிபந்தனைகளுடன் பிணையில் விடுவித்துள்ளார்.

தலா 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ரொக்கப் பிணையிலும் தலா 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் சந்தேகநபர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அடுத்தகட்ட விசாரணை அல்லது முறைப்பாட்டின் சாட்சியங்களுக்கு ஏதேனும் அழுத்தம் விடுப்பதாகப் பதிவானால், வழக்கு விசாரணை முடிவடையும் வரை விளக்கமறியலில் வைக்கப்படுவீர்கள் என சந்தேகநபர்களுக்கு நீதிவான் எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ)

## தீர்வு குறித்த...

பி. டெப்லிட்ஸ்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவினருடன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைய்னா பி. டெப்லிட்ஸ் தலைமையிலான குழுவினர் நேற்று முக்கிய பேச்சு நடத்தினர். இதன்போதே அமெரிக்கத் தூதுவர் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தனுடன் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

சந்திப்பில் மேலும் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் சுமந்திரன் எம்.பி. கருத்துத் தெரிவிக்கையில்,

"தமிழ் மக்களின் தீர்வு விடயங்களில் இலங்கை அரசால் வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அதனை நிறைவேற்றும் எந்தவொரு முன்னேற்றகரமான செயல்பாடுகளையும் முன்னெடுப்பதாகத் தெரியவில்லை. அமெரிக்கா இந்த விடயங்களில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினோம்.

தமிழர் பிரச்னைகள் தொடர்பில் ஐக்கிய அமெரிக்கா கடந்த 2012 ஆம் ஆண்டு தொடக்கம் காத்திரமான பங்களிப்பைச் செய்து வருகின்றது. அதனைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும். அதற்கு நன்றியுடையவர்களாக நாம் இருப்போம் என்றும் தெரிவித்தோம்.

அதேபோல் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் நாம் கோரிக்கை விடுத்தோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பு குறித்தும் அமெரிக்கத் தூதுவர் எம்மிடம் கேட்டறிந்துகொண்டார். இறுதி நேரத்தில் ஜனாதிபதியுடனான பேச்சு இரத்தானது குறித்தும், அதில் நாம் பேசவிருந்த முக்கிய விடயங்கள் குறித்தும் தெளிவுபடுத்தினோம்.

தொடர்ச்சியாக எமது மக்கள் வடக்கு, கிழக்கில் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்ற நிலையில் அவற்றுக்கான உடனடித் தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்றும் கோரினோம். காணி விடுவிப்பு, அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் அரசமைப்பு ரீதியிலான எமக்கான அங்கீகாரம் குறித்தும் பேசினோம்" - என்றார். (இ)

## பருத்தித்துறை...

இந்தப் பகுதியில் நேற்றும் - நேற்று முன்தினமும் மட்டும் 35 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். அத்துடன், தனிமைப்படுத்தப்பட்டவர்கள் பலர் அதனை மீறி வழமையான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இவற்றையடுத்தே இந்தப் பகுதி சுகாதாரப் பகுதியினரால் முடக்கப்பட்டது.

முடக்கப்பட்ட பகுதியில் தும்பளை வீதியில் 3ஆம் குறுக்குத் தெரு தொடக்கம் மெத்தைகடைச் சந்தி, ஓடக்கரை வீதி, பருத்தித்துறை பஸ் நிலைய நுழைவாயில், பத்திரகாளி அம்மன் ஒழுங்கை, விநாயகர் முதலியார் (வி. எம்.) ஒழுங்கை, துறைமுகப் பகுதி - மூன்றாம் குறுக்குத் தெரு கடற்கரை பகுதி அடங்குகின்றன.

இதனால், இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் நிலையம், தனியார் பஸ் நிலையம், மரக்கறி சந்தை, மீன் சந்தை, வர்த்தக நிலையங்கள், அரச, தனியார் வங்கிகள் என்பனவும் முடங்கியுள்ளன.

**வழமைபோன்று பஸ் சேவை!**

பருத்தித்துறை பஸ் நிலையம் முடக்கப்பட்டபோதும் மருதடி பகுதியிலுள்ள இ.போ.ச. சாலையிலிருந்து வழமை போன்று பஸ் சேவைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஆதிகோயிலடி முடக்கம்!**

இதேபோன்று, வல்வெட்டித்துறை - ஆதிகோயிலடி பகுதியும் நேற்றும் நேற்று அதிகாலை 4 மணி முதல் முடக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் நேற்று முன்தினமும் 88 பேர் தொற்றாளர்களாக இனங்காணப் பட்டனர். இதையடுத்தே, மக்கள் செறிந்து வாழும் இந்தப் பகுதி நேற்று அதிகாலை முதல் முடக்கப்பட்டது.

**காவலில் படையினர்**

முடக்கப்பட்ட பருத்தித்துறை நகரம், வல்வெட்டித்துறை - ஆதிகோவிலடி பகுதிகளில் பெருமளவான இராணுவத்தினர் கண்காணிப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஐ-2)

## பருத்தித்துறையில்...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ். போதனா மருத்துவமனை ஆய்வுகூடங்கள் மற்றும் பருத்தித்துறை நகரத்தில் நடத்தப்பட்ட எழுமாறான அன்ரிஜென் பரிசோதனையிலுமே இந்த விவரங்கள் வெளியாகின.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆய்வுகூடத்தில் நேற்று 234 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 42 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். இதில், 40 பேர் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவை சேர்ந்தவர்களாவர். மற்றைய இருவரும் வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்களாவர்.

யாழ். போதனா மருத்துவமனையின் ஆய்வுகூடத்தில் 407 பேரின் மாதிரிகள் பி. சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில், 22 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்களில் 20 பேர் வடக்கு மாகாணத்தை சேர்ந்தவர்களாவர். ஒருவரின் இடம் வெளியிடப்படவில்லை. மற்றொருவர் பூந்தோட்டம் தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டவராவார்.

தொற்றாளர்களான 20 பேர்களில், 6 பேர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையை சேர்ந்தவர்களாவர். இவர்களில் ஒருவர் பொலிஸ் அதிகாரியாவார்.

தவிர, சண்டிலிப்பாய் மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேர், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 2 பேர், உடுவில் மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவர், பலாலியில் ஒருவருமாக யாழ். மாவட்டத்தில் 61 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

நேற்றையதினம் முல்லைத்தீவு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேரும், மன்னாரில் 2 பேரும், வவுனியாவில் ஒருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேசமயம், பருத்தித்துறை நகரத்தில் நேற்று எழுமாறாக நடத்தப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் 6 பேர் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 'டெல்டா' அபாய்...

மருத்துவ அதிகாரி ருவன் விஜயமுனி குறிப்பிட்டுள்ளார்.

உருமாறிய கொரோனா வைரஸ் வகைகள் பரவுவது கொழும்பு மாநகரிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் தீவிரமடைந்துள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உருமாறிய டெல்டா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்கள் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்றும் மருத்துவ அதிகாரி ருவன் விஜயமுனி குறிப்பிட்டுள்ளார்.

டெல்டா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் பரிசோதனை முடிவுகள் சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும், உருமாறிய வைரஸ்கள் தொடர்பாக சுகாதார அமைச்சு மேலதிக ஆய்வுகளை மேற்கொள்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# நாவலப்பிட்டி நகர சபையில் அதிகாரம் இழந்தது ஐ.தே.க.

## ஆட்சியமைத்தது 'மொட்டு' கூட்டணி

நாவலப்பிட்டி, ஜூலை 16

கண்டி மாவட்டத்தின் நாவலப்பிட்டி நகர சபையின் ஆட்சியை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கைப்பற்றியுள்ளது.

நகர சபையின் தவிசாளராகப் பதவி வகித்த ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான சஷங்க சம்பத் சஞ்ஜீவவை தவிசாளர் மற்றும் உறுப்பினர் பதவிகளிலிருந்து நீக்கி, அண்மையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து வெற்றிடமான உறுப்பினர் ஆசனத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி புதிய உறுப்பினரை நியமித்திருந்தது.

இந்நிலையில், சபையில் வெற்றிடமான தவிசாளர் பதவிக்காக நேற்று வாக்கெடுப்பு நடத்தப்பட்ட நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் போட்டி யிட்ட அமல் பிரியங்கர தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவர் 2 மேலதிக வாக்குகளால் புதிய தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

சுயேட்சைக் குழு உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரும் புதிய தவிசாளருக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மேனகா ஹேரத் தலைமையில் இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. (இ)

# பாவனைக்கு பொருத்தமற்ற சீனி, நெத்தலி சிக்கியது

கொழும்பு, ஜூலை 16

கொழும்பு - கொட்டாஞ்சேனை சிவானந்தன் தெரு வில் உள்ள ஒரு சேமிப்புக் கிடங்கில் இருந்து பாவனைக்குப் பொருத்தமற்ற நெத்தலி மற்றும் சீனி ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன.

மேல் மாகாண புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய நுகர்வோர் அதிகார சபையும், மேல் மாகாண புலனாய்வுப் பிரிவும் இணைந்து இந்தச் சுற்றி வளைப்பை முன்னெடுத்துள்ளது.

இதன்போது, 15 கிலோ பெறுமதியுடைய 1,200 நெத் தலி மூடைகளும், 50 கிலோ பெறுமதியுடைய 9 சீனி மூடைகளும் நுகர்வோர் அதிகார சபையால் கைப்பற் றப்பட்டுள்ளன.

அத்துடன், இவ்வாறு கைப்பற்றப்பட்ட பாவனைக்குப் பொருத்தமற்ற நெத்தலிகளை விலங்குகளின் உணவு விற்பனைக்காகக் கொண்டு வந்ததாகக் கூறப்படுகின்றது.

இதன்படி, குறித்த நெத்தலி தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்காக அவற்றை விற்பனை செய்ய நுகர்வோர் அதிகார சபையால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, பறிமுதல் செய்யப்பட்ட பொருட் களின் மொத்த மதிப்பு 50 இலட்சத்துக்கு மேல் இருக்கலாம் என்று நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, நுகர்வோர் அதிகார சபையால் கைது செய்யப்பட்ட கடை முகாமையாளர் மாலிகாகந்த மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், விசாரணைகளுக்குப் பின்னர் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கொரோனா...

அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 50 பேரில் 29 ஆண்களும், 21 பெண்களும் அடங்குகின்றனர்.

இவர்களில் 30 - 50 வயதுகளுக்கு இடைப்பட்ட 8 ஆண்களினதும், 4 பெண்களினதும் மரணங்கள் பதிவாகியுள்ளன.

அவ்வாறே, 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட 21 ஆண்கள் மற்றும் 17 பெண்களின் மரணங்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. (இ)

## பிரிட்டன் மீதான...

கப்பட்டிருக்கும் தீர்மானத்தை இலங்கை ஆதரித்தமை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"இலங்கை அரசின் இந்த நடவடிக்கை கொரோனாத் தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டத்தையும் பாதிக்கும்.

பிரிட்டன் தம்மிடம் மேலதிகமாக உள்ள ஒக்ஸ்போர்ட் - அஸ்ரா செனகா தடுப்பூசிகளை உலக நாடுகளுக்குப் பகிர்ந்தளிக்க உறுதிகொண்டுள்ள நிலையில், அரசு இவ்வாறானதோர் அறிக்கையில் கையொப்பம் இட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் நாட்டின் தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டை ஆபத்தில் தள்ளிவிட வேண்டாம் என்று அரசிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

இதேவேளை, சிலரது கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்குத் தடுப்பூசிகளை விநியோகிக்கும் நடவடிக்கைகளை நிறுத்திவிட வேண்டாம் என்று பிரிட்டனிடம் கேட்டுக்கொள்கின்றோம்" - என்றுள்ளது. (இ)

## முழு அரசுக்கும்...

னார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க.

கட்சித் தலைமையமான சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அரசில் தனி நபர் ஒருவருக்கு எதிராகக் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையானது அரசில் உள்ள தரப்பினரை ஒற்றுமையடையச் செய்யும் வகையிலானதாகவே அமையும்.

எவ்வாறாயினும் தனி நபருக்கு எதிராக அன்றி ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முழு அரசுக்கும் எதிராகவே நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர வேண்டும்.

இதற்கமைய அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை அரசுக்கு எதிரான பிரேரணையாக ஐக்கிய மக்கள் சக்தி மாற்றியமைக்க வேண்டும்" - என்றார். (இ)

## சர்வதேச நாணய...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை பெற்றுக் கொண்டுள்ள அரச முறை கடன்களை மீள செலுத்துவதில் எவ்வித நெருக்கடி நிலைமையும் ஏற்படாது. 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதிலிருந்து அரச முறை கடன்களை உரிய காலத்தில் திருப்பி செலுத்தியுள்ளோம். எதிர்காலத்தில் செலுத்தவேண்டிய கடன்களை முறையாக செலுத்துவதற்கு உரிய திட்டங்கள் அனைத்து துறைகளையும் அடிப்படையாக கொண்டு வகுக்கப்பட்டுள்ளன.

நாட்டின் தேசிய பொருளாதார நிலைமை மற்றும் அந்நிய செலவாணித் துறை குறித்து முன்னாள் பிரதமர் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்ரமசிங்க குறிப்பிடும் கருத்துக்கள் முற்றிலும் அடிப்படையற்றவை.

சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை, வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல், ஏற்றுமதி நிலைமைகள் ஆகிய காரணிகள் அந்நிய செலவாணி துறையில் பிரதான பங்கு வகிக்கின்றன-என்றார்.

ஈழநாடு
Eelanadu

# மக்களை ஒடுக்குவதற்காகவே தனிமைப்படுத்தல் சட்டம் அமுல்

### சஜித் அணி குற்றச்சாட்டு




கொழும்பு, ஜூலை 16

**அரசுக்கு எதிராக அணித்திரளும் மக்களை ஒடுக்குவதற்காகவே இந்த அரசு தனிமைப்படுத்தல் சட்டத்தை அமுல்படுத்துகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜ கருண தெரிவித்தார்.**

**கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வாழ முடியாத நிலைமைக்கு நாட்டு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்த அரசு அந்த நிலைமைக்கு நாட்டு மக்களைத் தள்ளியுள்ளது. விவசாயிகளுக்குத் தேவையான போதிய உரம் இல்லை. எரிபொருள் விலையேற்றத்தையடுத்து மக்களின் வாழ்வாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாது பாடசாலை செல்லும் மாணவர்களுக்குக் கற்றலைத் தொடர்வதற்கான வாய்ப்பு இல்லாமல் போயுள்ளது.

வியாபாரிகளுக்கு வியாபாரத்தை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் அனைத்துப் பக்கங்களிலும் அரசு தோல்வியடைந்துள்ளது. அனைத்துப் பக்கங்களிலும் அரசு அசாதாரண நிலையை அடைந்துள்ளது.

இவற்றுக்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடத் தொடங்கினால் மக்களை ஒடுக்கி அவர்களது மனவேதனையை வெளிப்படுத்த விடாது இந்த அரசு மக்களைத் துன்பத்துக்குள் தள்ளியுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் அரசுக்கு எதிரான மக்கள் அணியைச் செயலிழக்கச் செய்யும் செயல்பாட்டில் அரசிலுள்ள அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

தனிமைப்படுத்தலை ஒரு தண்டனையாக நடைமுறைப்படுத்தவே இந்த அரசு முயல்கின்றது.

சுகாதாரப் பாதுகாப்புக்காகத் தனிமைப்படுத்தல் முன்னெடுக்கப்படவில்லை. இந்த அரசுக்கு எதிராக பொதுச்சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாகப் போராடியவர்களும் தனிமைப்படுத்தப்பட்டனர். பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டப் பின்னரும்கூட அவர்களைப் பலவந்தமாகத் தனிமைப்படுத்தியுள்ளனர்" - என்றார். (இ)

## கொத்தலாவல பல்கலை சட்டமூலத்துக்கு எதிராக கிரிபத்கொடையில் போராட்டம்

கொழும்பு, ஜூலை 16

இலவசக் கல்வித் திட்டத்தை இராணுவமயப்படுத்தும் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டமூலத்தை நீக்குமாறு கோரி அதிபர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு, கிரிபத்கொடையில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

தனிமைப்படுத்தல் என்ற போர்வையில் தொழிற்சங்கவாதிகளை அடக்குதல் மற்றும் பலவந்தமாக தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்களை விடுவித்தல் உள்ளிட்ட கோரிக்கைளை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (இ)

## மரண அறிவித்தல்

மலர்வு 18 - 05 - 1955



உதிர்வு 11 - 07 - 2021

### திருமதி தனலட்சுமி நித்தியானந்தன்

வேலணையைப் பிறப்பிடமாகவும், சரவணையை புகுந்த இடமாகவும், ஜேர்மனி Stadt Hoerstel ஐ தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி நித்தியானந்தன் கடந்த (11.07.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கார்த்திகேசு – மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற விஜயரத்தினம் – மகேஷ்வரி தம்பதியரின் மருமகளும், நித்தியானந்தனின் அன்பு மனைவியும், மயூரன், மயூரி, பாகிரதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கோபி விவேகானந்தா அவர்களின் பாசமிகு மாமியாரும், விவேகானந்தா – தெய்வநாயகி தம்பதியரின் அன்புச் சமபந்தியும், காலஞ்சென்ற பாலசுந்தரம், மலர்மகள் (கிளி), நித்தியானந்தன் (சோமு), கலைமகள் (கனகம்), காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் (நாதன்), பேரின்பதாசன் (ராசன்), தியாகாஸ்வரன் (ஈசன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், திருமகள், தம்பிராசா, சிவலோகநாதன், கானசரஸ்வதி, காலஞ்சென்ற கௌரி, ரூபவதனா, சந்திரரஜனி ஆகியோரின் நேசமிகு மைத்துனியும், சசிதரன், கோபிதா, கமலக்கண்ணன், தருசினி, சிறிகரன், வருசினி, அரிகரன் ஆகியோரின் அன்பு அன்ராவும், கயந்தன், தீபன், வத்சலா, சுபாசினி, நிரூசன், நிசாந்தினி, நிதர்சன், கார்த்திகா, கயூரன், கஸ்தூரன், ஜனா, யூச்சின், சரோன், அஷ்விந்தன், யசீகா ஆகியோரின் அன்பு அத்தையும், கலாநிதி சிறீரங்கன், காலஞ்சென்றவர்களான ரவிச்சந்திரன், ஜெயாநந்தன் மற்றும் கருணாநந்தன், விஜயேந்திரி ஆகியோரின் அன்பு அண்ணியும்,சுகந்தினி, காலஞ்சென்ற மகாதேவன், விக்னேஷ்வரி ஆகியோரின் அன்புச் சகலியும்,அபிசன், அபிராசி, அபிலக்சன் ஆகியோரின் நேசமிகு அம்மம்மாவும் ஆவார்.

**கிரியை**

Tuesday, 20 Jul 2021 9:00 AM - 12:00 PM
Friedhof Nordwalderstraße Nordwalder Str. 38, 48282 Emsdetten, Germany

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**பேரின்பதாசன்(ராசன்)**
**- சகோதரன்**
Mobile : +447450282704

தகவல்:
**குடும்பத்தினர்**

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை 16

பிட்டிகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊருகஸ்மங் ஹந்திய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது வெளிநாட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைத்துப்பாக்கியுடனேயே ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அமுகொட பிட்டிகல பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரை விசாரணைகளின் பின்னர் எல்பிட்டிய நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)

## 'எக்ஸ் – பிரஸ் பேர்ள்' கப்பல் விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 16

"எக்ஸ் - பிரஸ் பேர்ள்" கப்பல் தீப்பற்றியமை தொடர்பில் முன்னெடுக்கப்படும் வழக்கு விசாரணை எதிர்வரும் ஓகஸ்ட் 6ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, "எக்ஸ் - பிரஸ் பேர்ள்" கப்பல் தீப்பற்றியமை தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளை விரைவாக நிறைவு செய்து, அதன் முன்னேற்றங்களை நீதிமன்றத்துக்கு அறிக்கையிட நடவடிக்கை எடுப்பதாக சட்டமா அதிபர் சார்பில் மன்றில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மாதவ தென்னக்கோன் கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

விசாரணை அதிகாரிகளால் கோரப்பட்ட கப்பலின் உள்நாட்டு முகவர் நிறுவனத்திடம் காணப்பட்ட அனைத்து கணினி தரவுகளும் வழங்கப்பட்டுள்ளன என்று குறித்த நிறுவனம் சார்பில் வாதாடிய ஜனாதிபதி சட்டத்தரணி அநுர மெத்தேகொட நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார்.

அதற்கமைய, எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 06ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்த கொழும்பு பிரதம மேல் நீதிமன்ற நீதிபதி, விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையை அன்றைய தினம் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

இதனிடையே, நேற்றைய வழக்கு விசாரணையின் போது கப்பலின் கப்டன், கப்பல் நிறுவனத்தின் உள்நாட்டு முகவர் நிலையத்தின் தலைவர் அர்ஜூன ஹெட்டியாரச்சி உள்ளிட்ட நிறுவனத்தின் பிரதம அதிகாரிகள் சிலரும் மன்றில் ஆஜராகியிருந்தனர். (இ)

## மேலும் 16 லட்சம் தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்கும் சீனா



கொழும்பு, ஜூலை 16

இலங்கைக்கு மேலும் ஒரு தொகை 'சினோபார்ம்' தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்குவதற்கு சீனா தீர்மானித்துள்ளது.

இதன்படி 16 இலட்சம் டோஸ் தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்கவுள்ளதாக கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொள்வனவு செய்துள்ள மேலும் 20 இலட்சம் 'சினோபார்ம்' தடுப்பூசிகள் எதிர்வரும் 22ஆம் திகதி நாட்டை வந்தடை யவுள்ளன என்று ஔடத உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

இந்தத் தடுப்பூசிகள் கிடைத்த பின்னர் நாட்டில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையை மேலும் விரைவுபடுத்த முடியுமாக இருக்கும் என்று இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு- மறுஒளிபரப்பு
**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




1.00 மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- சிவப்பு மஞ்சள் பச்சை, ஜக்போட் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10
**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்- தீண்டாமை
10.00 மணி : நேருக்கு நேர்- அஷ்-ஷேய்க் எம்.எம். ரஹ்மான் துலைவர்-அகில இலங்கை ஜம் இய்யத்துல் வட கொழும்பு




**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்